# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்: 13 வள்ளுவர் ஆண்டு 2029 ஆவணி 31 புதன்கிழமை (16-09-1998) UTHAYAN A Lively National Tamil Daily சுடர்: 250


# இளைஞனின் மரணம் தொடர்பாக இரு இராணுவ அதிகாரிகள் கைது!

## விளக்க மறியலில் வைக்க உத்தரவு

யாழ்ப்பாணம், செப்டெம்பர் 16

இராணுவத்தால் விசாரணைக்கு எனக் கூட்டிச் செல்லப்பட்ட தமிழ் இளைஞன் ஒருவன் இராணுவப் பாதுகாப்பில் இருந்த சமயம் மர்மமான முறையில் இறந்தது தொடர்பாக இரு இராணுவ அதிகாரிகள் நேற்றுக் கைது செய்யப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டனர்.

கைதான இருவரையும் எதிர்வரும் 18 ஆம் திகதி வரை தடுப்புக் காவலில் வைக்குமபடி யாழ். மேலதிக நீதிவான் எஸ். ஏ. ஈ. ஏகநாதன் உத்தரவிட்டார்

யாழ். கார்மேல் வீதியைச் சேர்ந்த ஞானசிங்கம் அன்ரன் குணசேகரம் என்ற இளைஞரே கடந்த 9-ஆம் திகதி கைது செய்பப்பட்ட பின்னர் அடுந்த நாள் உயிரிழந்தார்என்பது தெரிந்ததே.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## தொடர்ந்து விசாரணை

யாழ்ப்பாணம், செப். 16

கடந்த வெள்ளிக்கிழமை நல்லூர் மாநகர சபைக் கட்டடத்தில் இடம்பெற்ற குண்டு வெடிப்புத் தொடர்பாக மாநகரசபை உறுப்பினர்கள் இருவர் நேற்று இரகசியப் பொலீஸாரால் விசாரிக்கப்பட்டனர்.

தமிழர் விடுதலைக் கூட்டணி மாநகர சபை உறுப்பினர்களான கே. சின்னத்துரை, செ. விஜயரத்தினம் ஆகியோரே நேற்று விசாரிக்கப்பட்டனர்.

இரகசியப் பொலீஸார் மாநகர சபை ஊழியர்கள் பலரையும் விசாரித்துள்ளனர். (உ-5-173)

## மட்டு. இணைப்புக் குழு
## கூட்ட மண்டபத்தின் கூரைகளும் சோதனை!

மட்டக்களப்பு, செப. 16

மட்டக்களப்பு மாவட்ட இணைப்புக் குழுக் கூட்டம் நேற்று ஆரம்பமாவதற்கு முன்னர் படையினரால் கூட்டம் நடைபெறும் செயலக மண்டபத்தின் கூரைகள் கூடச் சோதனையிடப்பட்டன.

வழமையாக இப்படியான கூட்டம் நடைபெறும்போது படை அதிகாரிகள் சமுகம் அளிக்கின்றபோதும், படையினரின் சோதனை எதுவும் நடைபெறுவதில்லை.

ஆனால் நேற்றுக் காலை 10-00 மணிக்குக் கூட்டம் ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னர் அங்கு வந்த படையினர் மண்டபத்தின் கூரைகளில் ஏறிச் சோதனை மேற்கொண்டனர்.

அதன் பின்பே நாடாளுமன்ற உறுப்பினர் கி. துரைராஜசிங்கம் தலைமையில் கூட்டம் நடைபெற்றது. படை அதிகாரிகளும் பங்குபற்றினர். (உ-3-21)

## 2 இளைஞர் மர்ம மரணம்:
## 16 இராணுவத்தினரும் தொடர்ந்து காவலில்

யாழ்ப்பாணம், செப். 16

புத்தூர் வாதரவத்தைப் பகுதியில் கடந்த நவம்பர் 29 ஆம் திகதி கண்டு பிடிக்கப்பட்ட இரு தமிழ் இளைஞர்களின் சாம்பல்களையும், மனித எச்சங்களையும் பகுப்பாய்வு செய்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு யாழ். நீதிமன்ற மேலதிக நீதிவான் எஸ். ஏ. ஈ. ஏகநாதன் உத்தரவிட்டார்.

காணாமல் போன மட்டுவிலைச் சேர்ந்த எஸ். ஜெயசீலன், எஸ். செளந்தரநாயகம் ஆகியோரின் சாம்பல்கள் மனித எச்சங்கள் ஆகியவை புத்தூர் இராணுவ முகாம் சுற்றாடலில் கண்டுபிடிக்கப்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## ஐ. நா. கூட்டத்தொடரில் பேச
# சந்திரிகா அமெ. செல்கிறார்!

## அவ்வேளை ரணிலும் அங்கே விஜயம்

கொழும்பு, செப். 16

நியூயோர்க்கில் எதிர்வரும் திங்கட்கிழமை முதல் புதன்கிழமை வரை (21 ஆம் திகதி முதல் 23 ஆம் திகதி வரை) நடைபெறவிருக்கும் ஐ. நாவின் 53 ஆவது கூட்டத் தொடரில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கலந்து கொண்டு உரையாற்றவிருக்கின்றார்.

இக் கூட்டத் தொடரில் பிரிட்டிஷ் பிரதமர் ரொனி பிளேயருக்குப் பின்னர் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க உரையாற்றுவார். அவரது உரைக்குப்பின்னர் அமெரிக்க ஜனாதிபதி பில் கிளின்ரனின் உரை இடம்பெறும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

ஜனாதிபதியுடன் அமெரிக்கா செல்லும் விசேட குழுவில் அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரும் உயரதிகாரிகளும் அடங்குவர்.

இதேவேளை —

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அமெரிக்காவில் தங்கியிருக்கும் சமயத்தில் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும் அமெரிக்காவுக்கு விஜயம் செய்கின்றார்.

நாளை அமெரிக்கா புறப்படும் ரணில் அங்கு தமது கட்சிக்கு நிதி திரட்டும் பல வைபவங்களில்கலந்துகொள்வார். அவருடன் அனுரா பண்டாரநாயக்காவும் அமெரிக்கா செல்வது குறிப்பிடத்தக்கது. (உ-3-10)

## மாநகரசபைக் கூட்டம் கூட்டணி அலுவலகத்தில்!

யாழ்ப்பாணம், செப் 16

யாழ். மாநகர சபையின் மாதாந்தக் கூட்டம் நேற்றுக் காலை 9 மணிக்குத் தமிழர் விடுதலைக் கூட்டணி அலுவலகத்தில் பிரதி மேயர் என். ரவிராஜ் தலைமையில் நடைபெற்றது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை நடந்த மாநகரசபையின் அவசரக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்களை முன்னெடுப்பது தொடர்பாக இக்கூட்டத்தில் ஆராயப்பட்டது.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## நீதிபதி கைது விவகாரம்:
## பொலீஸ் உயரதிகாரி உடனடி இடமாற்றம்

கொழும்பு, செப். 16

மேல் நீதிமன்ற நீதிபதி மகாநாம திலகரட்ன இரகசியப் பொலீசாரால் கைது செய்யப்பட்ட விவகாரம் தொடர்பாக, ஜனாதிபதியின் பணிப்புரையின் பேரில் இரகசியப் பொலீஸ் பணிப்பாளர் பந்துல விக்கிரமசிங்க உடனடியாக பொலீஸ்தலைமையகத்துக்கு மாற்றப் பட்டுள்ளார்.

கெஸ்பாவ நீதி மன்றத்தினால்பிணையில்செல்ல அனுமதிக்கப்பட்டபின்னர் மீண்டும்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## களுத்துறையில் இருந்து ஆறு கைதிகள் தப்பினர்!

கொழும்பு, செப். 16

களுத்துறைச்சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த ஆறு கிரிமினல் கைதிகள் நேற்று முன்தினம் நள்ளிரவு சிறைச்சாலை யன்னல்களை உடைத்துக்கொண்டு சிறைக் காவலர்களைத் தாக்கிவிட்டுத் தப்பி ஓடிவிட்டனர்.

கொலை, கொள்ளை, கற்பழிப்பு போன்ற குற்றச் செயல்களுக்காகத் தடுத்து வைக்கப்பட்டிருந்த கைதிகளே தப்பினர்.

நீதிமன்றங்களில் ஆஜர் செய்யப்படுவதற்காக அவர்கள் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர். அக் கைதிகளைக் கண்டுபிடிப்பதற்காக பொலீஸார் தேடுதல் மேற்கொண்டுள்ளனர். (உ-3-6)

## இரத்தினபுரிப் பகுதியில்
## பாதிப்புற்ற தொழிலாளர் வேலைக்குத் திரும்ப மறுப்பு

கொழும்பு, செப். 16

இரத்தினபுரி மாவட்ட தோட்டங்களில் இடம்பெற்ற வன்செயல்களில் பாதிக்கப்பட்ட தோட்டத் தொழிலாளர்கள் வேலைக்குத் திரும்ப மறுப்புத் தெரிவித்துள்ளனர்.

எரிக்கப்பட்ட தமது வீடுகளுக்குப் பதிலாக புதிய வீடுகள் அமைக்கப்படும் வரை தாம் வேலைக்கு செல்லமுடியாது என்று அவர்கள் தெரிவித்துள்ளனர்.

கடந்த சில நாள்களாக இடம்பெற்று வந்த வன்முறைகள் ஓய்ந்து அங்கு அமைதி நிலவுகின்றது.

இ. தொ. கா. தலைவரும், அமைச்சருமான எஸ். தொண்டமான் இன்று இரத்தினபுரிக்கு செல்ல விருக்கிறார்.

அதேவேளை — இரத்தினபுரியில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி வழங்குவது தொடர்பாக ஆராய இன்று உயர் மட்ட மாநாடு ஒன்று நடைபெறவிருக்கின்றது.

## மீண்டும் செஞ்சிலுவை கப்பல் சேவை

யாழ்ப்பாணம், செப். 16

திருகோணமலைக்கும், காங்கேசன்துறைக்கும் இடையிலான செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் நோயாளர் கப்பல் சேவை மீண்டும் எதிர்வரும் முதலாம் திகதி ஆரம்பிக்கப் படவிருக்கிறது.

இதுவரை இச்சேவையில் ஈடுபட்டிருந்த கப்பலில் ஏற்பட்ட பழுது காரணமாக சேவை இடைநிறுத்தப் பட்டிருந்தது. (உ-3-130)

## கருணாநிதி - வை. கோ. சந்தித்து கைகுலுக்கினர்!

சென்னை, செப்டெம்பர் 16

தமிழக முதல்வரும் தி. மு. க. தலைவருமான மு. கருணாநிதியும், மறுமலர்ச்சித் தி. மு. க. தலைவரும் எம். பியுமான வை. கோபாலசாமியும் நேற்று சென்னை விமான நிலையத்தில் சந்தித்துக் கை குலுக்கியவாறு புகைப்படங்களுக்கு ''போஸ்'' கொடுத்தனர்

அறிஞர் அண்ணாவின் 90 ஆவது பிறந்த நாள் விழா

(10 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## நயினாதீவு ஸ்ரீநாகபூஷணி அம்மன் கோயில்

# கணக்காளர் வெற்றிடம்

மேற்படி ஆலயத்திற்கு நிரந்தரக் கணக்காளர் ஒருவரைத் தேர்ந்தெடுப்பதற்காக கீழ்வரும் தகைமையுள்ளவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1) வயது: 30 வயதுக்கு மேல்.
2) கல்வித் தகைமைகள்: க. பொ. த. (உ/த) வர்த்தகம், கணக்கியல் திறமைச்சித்தி உட்பட 4 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.
3) விசேட தகைமைகள்; அரசாங்க /திணைக்களம் கூட்டுத்தாபனங்களில் கணக்குப் பதிவில் அனுபவம் இருத்தல் வேண்டும்.
4) தகைமையுடைய ஓய்வூதியம் பெறுவோரும் விண்ணப்பிக்கலாம்.
5) சம்பளம்: நேரடியாகப் பேசி முடிவு செய்யப்படும்.

விவரங்கள் அடங்கிய விண்ணப்பங்களை 30 - 09 - 98 ஆம் திகதி மாலை 5 மணிக்கு முன் நேரடியாகவோ, தபால் மூலமாகவோ, செயலாளர், அறங்காவலர்சபை, ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில் நயினாதீவு என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் கணக்காளருக்கான விண்ணப்பம் எனக் குறிப்பிடப்படல் வேண்டும்.

அறங்காவலர் சபை
ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில்
நயினாதீவு.

(59235)

---

வடமாகாண
## புற்றுநோய் - எய்ட்ஸ் நோய்த்தடுப்புச் சங்கம்
## வருடாந்தப் பொதுக்கூட்டம்

19 - 09 - 98 சனிக்கிழமை நடைபெற இருந்த மேற்படி சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் தவிர்க்க முடியாத காரணத்தால் அடுத்த நாள் 20-09-98 ஞாயிற்றுக்கிழமை காலை 10-30 மணிக்கு பிற்போடப்பட்டுள்ளமையை சகல அங்கத்தவர்களுக்கும் அறியத் தரப்படுகின்றது.

வைத்திய கலாநிதி இ. தெய்வேந்திரன்,
தலைவர்,
வடமாகாண புற்றுநோய் - எய்ட்ஸ்
நோய்த் தடுப்புச் சங்கம்,

(சி-4889)

---

## இலங்கை மின்சார சபை

### மின் பாவனையாளர்களின் கவனத்திற்கு

கடந்த 1998 ஆடி மாதம் 01 திகதி வரை எமது அலுவலகத்தால் மின்சாரப் பட்டியல்கள் தயாரிக்கப்பட்டு தங்களுக்கு வழங்கி வந்தோம். எங்களால் தங்களுக்கு வழங்கப்பட்ட கணக்கு இலக்கம் 80 என்ற தொடரில் ஆரம்பமானது. தற்போது கொழும்பில் எமது தலைமை அலுவலக கணனிப் பிரிவில் மின்சாரப் பட்டியல் தயாரித்து வழங்குகின்றோம். இதில் கணக்கு இல. 0081 என்ற தொடரில் ஆரம்பமாகி மின்சாரப் பட்டியல் இம்மாதம் வழங்கியுள்ளோம். இதில் உங்கள் பழைய நிலுவைகள் சேர்க்கப்படவில்லை. பழைய நிலுவைகள் யாவும் சேர்க்கப்பட்டு பத்து இலக்கங்கள் கொண்ட புதிய கணக்கிலக்கத்துடன் இன்னும் சில மாதங்களில் உங்களுக்கு வழங்குவோம். உங்களால் இதுவரை மின்சாரப் பட்டியலுக்கு செலுத்தப்பட்ட கொடுப்பனவுகள் யாவும் கணனி மூலம் கணக்கிடப்பட்டு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளமையால் அது வரை அந்தந்த மாதங்களுக்குரிய மின்சார கொடுப்பனவுகளை வங்கிகளில் தொடர்ந்தும் செலுத்தலாம் என்பதை அறியத் தருகின்றேன்.

இலங்கை மின்சார சபை சூழல் மற்றும் அபிவிருத்தி வேலைகளுக்கு கை கொடுக்கும் இலங்கை மின்சார சபை.

மின் பொறியியலாளர்
(யாழ். பிரதேசம்)

இ. மி. ச.,
யாழ். பிரதேச அலுவலகம்,
சுன்னாகம்.
1998-09-14.

(சி/4891)

---

## விபத்தில் சிறுவன் காயம்

யாழ்ப்பாணம் செப். 16

பாடசாலையில் இருந்து வீடு திரும்பிக்கொண்டிருந்த சிறுவன் சைக்கிள் விபத்தில் சிக்குண்டு கால் முறிந்து காயமடைந்தார்.

பண்டத்தரிப்பில் நேற்று இடம்பெற்ற இச்சம்பவத்தில் பாலேந்திரன் ஜெசிந்தன் (வயது 6) என்ற சிறுவனே காயமடைந்தவராவார்.

காயமடைந்தவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (15-139)

---

## லிபேட்டி தியேட்டர்

அச்சுவேலி.
இன்று
விஜய் - சிம்ரான்
நாகேஸ், விவேக் நடித்த
நண்பர்கள்
நேரம்:- 10-30, 2-30
(பழைய நேரம்)
Tele. No. 070-212223

(59242)

---

## ராஜா டாக்கீஸ்

யாழ்ப்பாணம்.
ரஜனி, மீனா
நடித்த
**முத்து**
(கடைசி வாரம்)
18 ஆம் திகதி முதல்
அமைதிப்படை
10-30, 2-00, 5-00
(புதிய நேரம்)

---

## நாகம்ஸ் சினிமா

சுன்னாகம்
15 - 09 - 98 முதல்
எம் ஜி. ஆர்.
ஜெயலலிதா நடித்த
ஒளிவிளக்கு
( ரீல்ஸ் )
காட்சி: 10-30, 2-30

(59241)

---

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
இலங்கை

## இராமநாதன் நுண்கலைத்துறை

இசைக்கலைமாணி/
நாட்டியக்கலைமாணி/
இசைமாணி/
நாட்டியமாணி

### புதிய அனுமதி 1998

### செய்முறை விசேட நேர்முகப் பரீட்சைகள்

மேற்படி பரீட்சைக்கு அனுமதி அட்டைகள் கிடைக்கப்பெற்று, இதுவரை தோற்றாத மாணவர்களுக்கான விசேட செய்முறை, நேர்முகப் பரீட்சைகள் நாளை 17-09-1998 ஆம் திகதி வியாழக்கிழமை யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் காலை 9-30 மணிக்கு நடைபெறும்.

பதிவாளர்
14-09-1998.

(சி/4885)

---

## கண்ணீர் அஞ்சலி

எமது கல்விநிலைய ஆசிரியரான
திரு. கோபி அவர்களின்
தந்தையாரான
### நாகநாதர் கந்தையா

அவர்கள் இறைபதம் எய்தியதை ஒட்டி அன்னாருக்கும், அன்னாரின் குடும்பத்தினருக்கும் எமது கண்ணீர் அஞ்சலியைச் செலுத்திக் கொள்கிறோம்.

மாணவ, மாணவிகள் (98, O/L)
எடிசன் கல்வி நிலையம்

(சி/4896)

---

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியை
திருமதி சிவமணி கந்தையா
அவர்களின் அன்புத் தாயார்
### திருமதி கற்பகம் தம்பிப்பிள்ளை

அவர்கள் மரணமானதையிட்டு துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
பழைய மாணவர் சங்கம்.
யாழ். இந்து ஆரம்ப பாடசாலை

(59244)

---

## ஓராண்டு நினைவலைகள்

தாயின் மடியில
17 — 09 — 1926



இறைவன் அடியில்
27 — 09 — 1997

அமரர்
### சண்முகம் இராசலிங்கம்
( ஓய்வுபெற்ற சிரேஷ்ட கணக்காய்வாளர் )

திதி: 1998 - 09 - 16

காலமெலாம் எமக்கென வாழ்ந்து
பாசமழை பொழிந்த அப்பாவே! அன்புத்தெய்வமே!
எங்கள் துயர் துடைக்க ஓடி வாராயோ?
ஆண்டொன்று சென்றதப்பா உங்கள் குரல் கேட்டு
என்றுமே எங்கள் நெஞ்சை விட்டு
அகலாதப்பா உங்கள் நினைவு

பிரிவால் துயருறும்:
மனைவி, மகள்.

காளி கோயிலடி,
அச்சுவேலி.

(சி/4895)

---

## மரண அறிவித்தல்

திருமதி
### தம்பிப்பிள்ளை கற்பகம்
[ஓய்வுபெற்ற மருத்துவ மாது]

எழுவைதீவைப் பிறப்பிடமாகவும் கந்தர் மடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தம்பிப்பிள்ளை கற்பகம் 14. 09. 98 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நாகமணி - நாகமுத்து தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரியும், காலஞ்சென்ற தம்பிப்பிள்ளையின் [ஓய்வு பெற்ற அதிபர், மாத்தளை/யட்டவத்தன அரசினர் பாடசாலை] அன்பு மனைவியும், சிவமணியின் [ஆசிரியர் யா/இந்து ஆரம்ப பாடசாலை] அன்புத் தாயாரும், கந்தையாவின் அன்பு மாமியாரும், காலஞ்சென்ற பசுபதிப்பிள்ளை [அதிபர்], தங்கம்மா, காலஞ்சென்ற சின்னம்மா, நாகம்மா, யோகம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரது இறுதிக் கிரியைகள் 15. 09. 98 இல் நடைபெற்றன.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சி. கந்தையா
(மருமகன்)

56/24, ஆத்திசூடி வீதி,
கந்தர்மடம்.

(59243)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈரானிடம் கொலையாளிகளை ஒப்படைக்க தலிபான் மறுப்பு!

## மன்னிப்புக் கோரவும் முடியாது என்கிறது

காபூல், செப்: 16

"ஈரானிய இராஜதந்திரிகளைக் கொலை செய்தவர்கள் தலைமைப்பீடத்தின் உத்தரவு இன்றியே செயற்பட்டனர். இதனால் அவர்கள் குற்றவாளிகளே. ஆயினும் அவர்களை ஈரானிடம் ஒப்படைக்க மாட்டோம்."

இவ்வாறு பாகிஸ்தானில் உள்ள தலிபான் தூதுவர் ஷாஜித் உ றஹ்மான் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

கொலை செய்தவர்களை நாம் தேடிக்கொண்டிருக்கின்றோம். அவர்கள் பிடிபட்டதும் விசாரணைக்கு உட்படுத்தப்படுவார்கள். ஆனால் அவர்களை வேறு எவரிடமும் ஒப்படைக்க மாட்டோம்.

ஈரானியரைக் கொன்றவர்கள் தலிபான் அமைப்பில் இருந்து தப்பி ஓடியவர்களே.

தலைமறைவான அவர்கள் பிடிக்கப்பட்டால் ஆப்கானிஸ்தானின் சட்டத்தின் படியே தண்டிக்கப்படுவார்கள்.

இராஜதந்திரிகள் கொல்லப்பட்டதற்காக எந்த ஒரு சூழ்நிலையிலும் ஈரானிடம் மன்னிப்புக் கோர மாட்டோம்.

இப்படி அவர் கூறினார்.

இதேவேளை இக்கொலைகள் தொடர்பான விவகாரத்தைச் சாட்டாக வைத்துக் கொண்டு ஆப்கன் மண்ணில் கால்பதிக்க ஈரான் முயல்கின்றது என தலிபான் தலைவர் முல்லா ஓமார் முகமட் தெரிவித்துள்ளார்.

கடந்த மாதம் மஸார் ஷெரீப் நகரைத் தலிபான் கைப்பற்றிய போதே ஈரானிய இராஜ தந்திரிகள் கொல்லப்பட்டிருந்தனர்.

தனது இராஜதந்திரிகளைக் கொலை செய்தவர்களை ஒப்படைக்கும்படி ஈரானிய அதிகாரிகள் விடுத்த வேண்டுகோளை அடுத்தே தலிபான் அமைப்பு மேற்படி கருத்துக்களைத் தெரிவித்தது. (இ-ரி)

## ஷியா முஸ்லிம்களின் முக்கிய நகர் வீழ்ச்சி!

காபூல், செப், 16

ஆப்கானிஸ்தானில் சிறுபான்மையினரான ஷியா முஸ்லிம்கள் வாழும் பாமியான் மாகாணத்தை தலிபான் கைப்பற்றியுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

பாமியன் உட்பட, ஆப்கானிஸ்தானின் பெரும்பகுதி இப்போது சுனிமுஸ்லிம்களான தலிபான் வசமாகியுள்ளது.

காபூலுக்கு வடக்கே உள்ள பஞ்ச பள்ளத்தாக்குமட்டுமே தற்போது எதிரணிப் படைகள் வசம் இருந்து வருகின்றது.

ஈரானின் உதவியுடன் ஷியா முஸ்லிம்கள் பாமியானை ஆப்கானிஸ்தானின் வலுக்கோட்டையாக வைத்திருந்தனர். இதனால் ஷியா முஸ்லிம்களுக்கும் தலிபானுக்கும் இடையே போட்டி நிலவி வந்தது. தற்போது பாமியான் மாகாணம் தலிபானிடம் வீழ்ந்ததால் ஷியா முஸ்லிம்களின் நிலை கவலைக்கிடமாகலாம் என தெரிவிக்கப்படுகின்றது.

அதேசமயம் பாமியானைக் கைப்பற்ற வடக்கிலும் கிழக்கிலும் இருந்து முன்னேறிய தலிபான் தாக்குதல் பிரிவினருக்கு பாகிஸ்தான் உதவியதாகவும்—

பாமியானையும். அதன் சுற்றுப்பகுதிகளைத் தாக்க பாகிஸ்தான் தனது விமானப் படைகளை அனுப்பியது என்றும் —ஈரான் குற்றஞ் சாட்டி உள்ளது.

## நபிகளை நிந்தனை செய்தவருக்கு தண்டனை

இஸ்லாமாபாத், செப். 16

நபிகள் நாயகத்தை நிந்தனை செய்த குற்றத்துக்காக முஸ்லிம் ஒருவருக்கு பாகிஸ்தானின் பஞ்சாப் மாகாண நீதிமன்றம் மரண தண்டனை விதித்துள்ளது.

இறை நிந்தனைச் சட்டங்களின் கீழ் பாகிஸ்தானில் முஸ்லிம் ஒருவருக்கு மரண தண்டனை விதிக்கப்படுவது இதுவே முதற்தடவை ஆகும்.

இந்த இறை நிந்தனைகள் சட்டத்தின் கீழ் பல கிறிஸ்தவர்கள் ஏற்கனவே குற்றவாளிகள் ஆக்கப்பட்டிருந்தனர்.

(இ-ரி)

## சடலங்களை ஒப்படைக்க இஸ்ரேல் அரசு மறுப்பு

டெல்அவில், செப். 16

மேற்குப் பகுதியில் இருந்து இஸ்ரேலியப் பாதுகாப்புப் படைகளால் கடத்திச் செல்லப்பட்டு கடந்த வார இறுதியில் சுட்டுக்கொல்லப்பட்ட இரண்டு ஹமாஸ் தலைவர்களின் சடலங்களை அவர்களின் உறவினர்களிடம் ஒப்படைக்கப் போவது இல்லை என்று இஸ்ரேல் அறிவித்துள்ளது.

கொல்லப்பட்ட இருவரும் சகோதரர்கள் என்றும்—

ஹமாஸ் இயக்கத்தின் முக்கிய தலைவர்கள் என்றும்—

மேஜர் ஜெனரல் மோஷி ஆலொம் தெரிவித்துள்ளார்.

இவர்களது சடலங்களை உறவினர்களிடம் ஒப்படைத்தால் இறுதிச் சடங்குகளின் போது பெருங் கலவரங்கள் ஏற்படலாம் என்று எதிர்பார்ப்பதால் சடலங்களை இஸ்ரேலிலேயே அடக்கம் செய்யப்போவதாகவும் மோஷி கூறினார்.

இதே வேளை இக்கொலை தொடர்பான பழிவாங்கற் படலம் தொடரப் போவதாக ஹமாஸ் அமைப்பு இஸ்ரேலுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளது.

ஹமாஸின் எந்த முயற்சியையும் அச்சுறுத்தலையும் தயவு தாட்சணியம் இன்றி முறியடிப்போம் என்று இஸ்ரேலியப் பிரதமர் பென்ஜமின் நத்தனியாகு தெரிவித்துள்ளார். (இ-ரி)

## பிக்காஷோ ஓவியமும் மீட்பு

அண்மையில் கனேடியக் கடலில் வீழ்ந்த சுவிஸ் எயர் லைன்ஸ் விமானத்தின் மீட்புப் பணிகளின் போது உலகப் புகழ் பெற்ற ஓவியர் பிக்காஷோ வரைந்த ஓவியம் ஒன்றும் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

பெய்ஜேட் எனப் பெயர் சூட்டப்பட்ட இந்த ஓவியம் பல கோடி டொலர் பெறுமதி உடையதாயினும் ஓவியம் அழிந்து போயுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (இ-ரி)

## உச்சிமாநாடு ஒத்திவைப்பு

இந்த ஆண்டின் பிற்பகுதியில் டாக்காவில் நடைபெற இருந்த 8 முஸ்லிம் நாடுகளின் அமைப்பான "வளரும் 8" அமைப்பின் இரண்டாவது உச்சி மாநாடு டாக்காவின் வெள்ள நிலைமை காரணமாக ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

அவசியமற்ற செலவீனங்களைக் குறைத்துவிட்டு வெள்ளத்துக்கு பிற்பாடு மேற்கொள்ளப் படவுள்ள நிவாரணப் பணிக்கு இந்தநிதிகளைத் திருப்பிவிட பங்களாதேஷ் அரசு தீர்மானித்ததை அடுத்தே உச்சிமாநாடு ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன. (இ-ரி)

## ஈரானியரின் 8 சடலங்கள் மீட்பு

காபூல் செப். 16

தலிபான் படையினரால் ஈரானிய இராஜ தந்திரிகள் ஒன்பது பேரில் எட்டுப் பேரின் சடலங்களைக் கண்டெடுத்துள்ளதாக செஞ்சிலுவை சர்வதேசக் குழு தெரிவித்துள்ளது.


உங்கள் குழந்தையைப் போலியோவுக்குப் பலியாக விடாதீர்கள்!

போலியோ கொடியது. அது உங்கள் குழந்தையை முடமாக்கிவிடும். உங்கள் ஆசைக் கனவுகள் அனைத்தையும் சிதறடித்துவிடும். போலியோவின் பிடியிலிருந்து உங்கள் அன்புச் செல்வத்திற்குப் பாதுகாப்பு அளியுங்கள். தடுப்பு மருந்தை தவறாது கொடுங்கள்.
ஐந்து வயதிற்குட்பட்ட சகல குழந்தைகளுக்கும் செப்டெம்பர் 19 ஆம் திகதியும் ஒக்டோபர் 24 ஆம் திகதியும் போலியோ வாய்மூலத் தடுப்பு மருந்து கொடுக்கப்பட வேண்டும்.

முன்னைய தேசிய தடுப்பு மருந்தேற்றல் தினங்களில் அல்லது வழமையான திட்டத்தின்கீழ் ஏற்கனவே தடுப்பு மருந்து பெற்ற குழந்தைகளுக்கும் இந்தத் தினங்களில் தடுப்பு மருந்தை மீண்டும் கொடுப்பது அவசியமாகும். மறவாதீர்கள். மேலே குறிப்பிட்ட தினங்களில் உங்கள் குழந்தையை அண்மையிலுள்ள சுகாதார நிலையத்திற்கு அழைத்துச் சென்று போலியோ தடுப்பு மருந்தைக் கொடுங்கள்.

தேசிய தடுப்பு மருந்தேற்றல் தினங்கள்
செப். 19
ஒக். 24

போலியோ அற்ற சமுதாயத்தை உருவாக்க வாரீர்!

PolioPlus unicef

Grant McCann

பிள்ளைகள்: சமாதானத்தின் சரணாலயங்கள்

(சி-489 3)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ்சிறு விளம்பரம்

### காணி விற்பனை

ஊரெழு எல்லை சுன்னாகத்தில் உள்ள முப்பத்தைந்து பரப்பு பனங்காணி விற்பனைக்குண்டு. தோட்டச் செய்கைக்கு உகந்த மண். தொடர்பு: செ. இராமநாதன், மயிலணி, சுன்னாகம்.

(59203)

### தவறி விட்டது

குமரேசன பாலசண்முகன ஆகிய எனது விசேட, பாடசாலை அடையாள அட்டைகளும், தினக்குறிப்பும் கவட்டிக்கும் கொக்குவிலுக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மணியகாரன் ஒழுங்கை, கொக்குவில் என்ற விலாசத்தில் ஒப்படைத்துதவவும்.

[59223]

### மணமகன் தேவை

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 7 இல் செவ்வாய் கிரகபாவம் 70 உடைய (28 வயது) மருத்துவபீட இறுதியாண்டு மாணவிக்குப் பெற்றோர் மணமகனைத் தேடுகின்றனர். சகல விவரங்களோடு சாதகப் பிரதியையும் இணைத்து கடிதமூலம் தொடர்பு கொள்ளவும். இல. 785, மே/பா உதயன்.

[59194]

36 வயது அவிட்டம் 4 கிரகபாவம் $41\frac{1}{4}$. உதயத்துச் செவ்வாய், அரசாங்கத்தில் 10 வருடம் நிரந்தர விகிதராக வேலைசெய்யும் மணமகளுக்கு மணமகன் தேவை. தொடர்பு: கு. திருவிளங்கம் "மாங்கல்யா மல்றி சேர்விஸ், 3ஆம் கட்டையடி, வாசிகசாலை ஒழுங்கை கல்வியங்காடு.

[59223]

### புறொயிலர் குஞ்சு

புறொயிலர் குஞ்சு உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு; மல்லிகாபதி, சந்தை முன் ஒழுங்கை, மானிப்பாய்.

(59192)

### யாழப்பாணம்

யாழ்ப்பாணமா கொழும்பா? 300 நாடகங்களும், நாடகம் எழுதுவது எப்படி? என்ற நூலையும் தந்த அராலியூர் ந. சுந்தரம்பிள்ளையின் ஏழாவது நாடகநூல், 7 நாடகங்களும் 4 கட்டுரைகளும் ரூபா 50.

[59226]

### திறப்புக் கோர்வை

14 – 09 – 98 அன்று மானிப்பாய்ச் சந்திக்கு அண்மையில் ஒரு பெரிய திறப்புக் கோர்வை கண்டெடுக்கப்பட்டது. தவறவிட்டவர் தென் இந்திய திருச்சபை சத்தியபுரம் (மல்வம்) உடுவில் என்ற முகவரியில் ஆதாரம் காட்டிப் பெற்றுக்கொள்ளவும்.

[59219]

## போட்டிப் பரீட்சைக்கான பொது அறிவு

★ ஓவ்செற் அச்சுப் பதிப்பு

ஆக்கம்:

வே. தயேந்திரன்

( B. Com )

★ பிரபல புத்தகசாலைகளில் விற்பனையாகின்றன.

யாழ். விநியோகஸ்தர்:

ஸ்ரீசுப்பிரமணிய புத்தகசாலை

வண்ணார்பண்ணை.

(59225)

## கிருஸ்ணா மர அரிவு அகம் திறப்பு விழா

கிருஸ்ணா மர அரிவகத் திறப்புவிழா இன்று (16 09 – 98) புதன்கிழமை

காலை 9-00 மணி தொடக்கம் நண்பகல் 12-00 மணி வரையில் உள்ள சுபவேளையில் நடைபெற உள்ளது என்பதனை நண்பர்கள், வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றேன்.

வ. கிருஸ்ணசாமி ( கந்தசாமி )
வீரபத்திரர் கோயிலடி,
கல்வியங்காடு,
யாழ்ப்பாணம்.

(59228)

## நல்லூர் வணிகர் கழகம் அன்பான வேண்டுகோள்

1995 ஆம் ஆண்டு இடம்பெயர்வினால் பாதிக்கப்பட்ட நல்லூர் வணிகர் கழக உறுப்பினர்கள் யாவரும் தங்களன் வர்த்தகம் தொடர்பான இழப்பீட்டுக்கு நஷ்டஈடு பெறுவதற்கு கீழ்க்கண்ட ஆவணத்துடன் நல்லூர் வணிகர் கழகத்துடன் தொடர்பு கொள்ளவும்.

1) வர்த்தகப் பொருள்கள் கட்டடங்கள் இழப்பீடு தொடர்பாக பொலீஸில் பதிவு செய்யப்பட்ட பொலீஸ் அறிக்கை.

முக்கிய குறிப்பு:

கப்பல் மூலம் சாமான்கள் இறக்குமதி செய்பவர்கள் சங்கத்துடன் தொடர்பு கொள்ளவும். ஆவன செய்து கொடுக்கப்படும்.

செயலாளர்
நல்லூர் வணிகர் கழகம்

திருநெல்வேலி கிழக்கு,
ஆடியபாதம் வீதி,
நல்லூர்.

(59230)

## முதலாம் மாத அஞ்சலி

அமரர்

**A. T. S. இரத்தினசிங்கம்**

[லண்டன்]

ஹாட்லிக்கல்லூரி பழையமாணவர்மன்ற லண்டன் கிளையை உயிரோட்டமாக பல ஆண்டுகள் வழிநடத்தி கல்லூரியின் வளர்ச்சிக்கு உறுதுணை புரிந்த மூத்த பழைய மாணவரொருவரின் காலத்துக்கு முந்தியபிரிவால் கல்லூரித்தாய் கண்ணீர்வடிக்கிறாள்.

கல்லூரியோடு சம்பந்தப்பட்ட அனைத்துத் தரப்பினரும் அன்னாரது குடும்பத்தவரின் சோகத்தில் பங்குகொள்வதோடு தமது அஞ்சலியையும் செலுத்துகின்றார்கள்.

ஹாட்லிக் கல்லூரி,
பழையமாணவர் மன்றமும்,
கல்லூரிச் சமூகமும்.

பருத்தித்துறை. (சி/4888)

## கண்ணீர் அஞ்சலி

எம்மைவிட்டு மறைந்தும் எமது மனதைவிட்டு அகலா மாண்பு மிகு வல்லாளன் யாழ். முதல்வர்

**திரு. பொ. சிவபாலன்,**

செயல் வீரர் திருவாளர்

**சு. பத்மநாதன்,**

பதில் ஆணையாளர், தனது செயல் திறனை யாழ். நகரில் பொறித்த பொறியியல் வல்லுனர் திருவாளர்

**எம். ஈஸ்வரம்,**

கட்டடக்கலை வடிவச் சிற்பி

திருமதி

**மல்லிகா இராசரெத்தினம்,**

நயம் திறம்பா சொல் வடிக்கும் திருவாளர்

**பொ. பத்மராஜா**

தட்டெழுத்தாளர் ஆகியோருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்துடன் கூடிய கண்ணீரைச் சிந்துகின்றோம். இவர்களது பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

வேலைப்பகுதி உத்தியோகத்தர்களும்,
ஊழியர்களும்.
மாநகர சபை, யாழ்ப்பாணம்.

(59229)

## மங்களகரமான ஆரம்பம் யதுரஷ் வீடியோ

திருமண வைபவங்கள், பூப்புனித நீராட்டு விழாக்கள் பிறந்த நாள் விழாககள் போன்ற அனைத்து மங்கள வைபவங்களையும்

நவீன மிக்சிங்குடன் வீடியோ படம் பிடித்திடவும் புகைப்படங்கள் எடுக்கவும்,

மற்றும் புதிய, பழைய திரைப்பட பிரதிகளை வாடகைக்குப் பெற்றுக் கொள்ளவும் நீங்கள் இன்றே நாடவேண்டிய ஸ்தாபனம்

**யதுரஷ் வீடியோ அன் போட்டோ**

கண்டி வீதி, நுணாவில் மேற்கு,
சாவகச்சேரி.

(59237)

## திறப்புவிழா அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் வெகுதானிய வருடம் ஆவணி மாதம் 31 ஆம் திகதி (16-9-98) புதன்கிழமை 9.00 மணி முதல் 12 மணி வரையுள்ள சுபவேளையில்

எம்மால்

**அம்பிகா வீடியோ சென்ரர்**

எனும் ஸ்தாபனம் திறந்து வைக்கப்படுகின்றது.

★ புதிய. பழைய படப் பிரதிகள்

★ ரீ. வி. டெக், ஜெனரேற்றர் என்பனவும் வாடகைக்கு விடப்படும்.

இல. 4. வண்ணார்பண்ணை,
(சிவன்கோயில் முன்பாக.)
யாழ்ப்பாணம்.

(59236)

## தொழில் நுட்பக் கல்லூரிகளின் இறுதிப்பரீட்சைகள்- 1998

தொழில்நுட்பக் கல்லூரிகளின் இறுதிப் பரீட்சைகள் 1998 நவம்பர் மாதம மூன்றாவது வாரத்தில் தொடங்கி நடைபெறவுள்ளது. 1998 ஆம் கல்வி ஆண்டில் பயிற்சிநெறிகளைப் பூர்த்தி செய்யும் மாணவர்களும், இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் நடத்தப்பட்ட மேற்படி பரீட்சைகளில் நூனசித்தி பெற்ற மாணவர்களும், தமது நூனசித்தியை பூர்த்தி செய்து கொள்வதற்கு. 1998. 09. 23 ஆம் திகதிககு முன்னர் பரீட்சைக்குரிய விண்ணப்பப்படிவங்களை தமது பகுதித் தலைவர்களிடம் ஒப்படைக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

- அதிபர்.

தொழில்நுட்பக் கல்லூரி,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்,
15. 09. 1998.

(சி/4890)

## U.N.D.P / P.D.B.

ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்ட உதவியுடன் பனை அபிவிருத்திச்சபை மேற்கொள்ளும்

**பனம் விதை நடுகைத் திட்டம் 1998**

ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித்திட்ட உதவியுடன் பனை அபிவிருத்திசபை இவ்வாண்டு யாழ். மாவட்டத்தில் பனை நடுகைத்திட்டத்தினை மேற்கொள்ளவுள்ளது.

எனவே இந்நடுகைத்திட்டத்தில் இணைந்து கொள்ள விரும்பும் நலன் விரும்பிகள், சமூக சேவை ஸ்தாபனங்கள், கூட்டுறவு அமைப்புக்கள், அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள், பாடசாலைகள் போன்ற சமூக சேவை நிறுவனங்கள் தயவு செய்து எம்முடன் தொடர்பு கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

பனம் விதைகள் யாவும் தங்களால் தெரிவிக்கப்படும் இடங்களில் கொண்டு வந்து நடப்படும் வரையான அனைத்து நடவடிக்கைகளும் இலவசமாக மேற்கொள்ளப்படும் என்பதை அறியத்தருகின்றோம்.

பொது முகாமையாளர்
பனை அபிவிருத்திச் சபை.

தலைமைக் காரியாலயம்,
53, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.

(சி – 4887)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வவுனியா, மட்டக்களப்பு

# கல்விக் கல்லூரிகளுக்கான அனுமதி; யாழ்ப்பாணத்தில் நேர்முகப் பரீட்சை

வவுனியா, செப். 16

மட்டக்களப்பு, வவுனியா தேசிய கல்விக் கல்லூரிகளில் 1998 ஆம் கல்வியாண்டுக்கு யாழ். மாணவர்களைச் சேர்த்துக் கொள்வதற்கான நேர்முகப் பரீட்சைகள் யாழ்ப்பாணம் கல்வி வலயம் ஒன்றில் அடுத்தமாதம் 9 ஆம் 10 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளன. இதற்காக மட்டக்களப்பு, வவுனியா கல்விக்கல்லூரிகளின் பீடாதிபதிகளை உள்ளடக்கிய குழு ஒன்று யாழ்ப்பாணம் வரவுள்ளது.

தேசிய கல்விக் கல்லூரிக்கு விண்ணப்பம் செய்த யாழ். மாவட்ட மாணவர்களுக்கு நேர்முகப் பரீட்சைக்கான கடிதங்கள் அவர்களது முகவரிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஜீ. சீ. ஈ. உயர்தரப் பரீட்சையில் பெற்ற புள்ளிகளில் வெட்டுப் புள்ளி அடிப்படையில் மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தெரிவு செய்யப்பட்ட அடிப்படை வெட்டுப் புள்ளிகள் வருமாறு:-

★ ஆரம்பக் கல்வி — ஆண்கள் 252, பெண்கள் 253,

★ விஞ்ஞானம்— ஆண்கள் 211, பெண்கள் 224.

★ கணிதம் — ஆண்கள் 193, பெண்கள் 165,

★ உடற்கல்விக்குமாவட்ட மட்ட அடிப்படையில் மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர் — ஆண்கள் 250, பெண்கள் 240.

உடற் கல்விக்கு தேசிய மட்டத்தில் விளையாட்டு நிகழ்வுகளில் பங்குபற்றிய மாணவர்கள்மேலும் குறைந்த புள்ளிகளுடன் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (ஐ-9)

## கல்வி அபி. சபை

வடமராட்சி கிழக்கு மருதங்கேணி கல்வி கோட்டத்தினரால் இன்று புதன் கிழமை அம்பனில் மருதங்கேணி கல்விக்கோட்ட கல்வி அபிவிருத்திச் சபை அங்குரார்ப்பணம் செய்யப்படும். (இ-36)

நீதியரசர் மகாநாம கைது:

# கோட்டை நீதிமன்றம் முன் சட்டத்தரணிகள் ஆட்சேபம்

கொழும்பு, செப். 16

மேல் நீதிமன்ற நீதிபதி மகாநாம திலகரட்ண இரகசியப் பொலீஸாரால் கைது செய்யப்பட்டதை ஆட்சேபித்து நூற்றுக்கணக்கான சட்டத்தரணிகள் கொழும்பு கோட்டை நீதிமன்றம் முன்பாக திங்களன்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

கெஸ்பாவ நீதிவானால் பிணை அனுமதி வழங்கப்பட்ட பின்னரும் நீதியரசர் மகாநாமவை ரகசியப்பொலீஸார் கைது செய்ததை ஆட்சேபித்தே சட்டத்தரணிகள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

கொழும்பு கோட்டை நீதிமன்றத்தில் எதிர்வரும் வியாழக்கிழமை வரை வழக்குகளுக்கு ஆஜராவதில்லை என்றும் சட்டத்தரணிகள் முடிவு செய்துள்ளனர்.

இராணுவ சார்ஜன்ட் ஒருவரைத் தாக்கியது தொடர்பான முறைப்பாட்டை அடுத்து கெஸ்பாவ நீதிவானால் விடுக்கப்பட்ட பிடியாணையின் பேரில் நீதியரசர் மகாநாம திலகரட்ண கைது செய்யப்பட்டார்.

பிணை அனுமதி வழங்கப்பட்ட பின்னரும் அவர் மீண்டும் கைதாகி இருப்பது நீதிமன்றத்தின் சுயாதீன செயற்பாட்டை இழிவு செய்வதாக அமைகின்றது என ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட சட்டத்தரணிகள் தெரிவித்தனர். (ஐ-10)

# சமாதானம் பற்றி பேச்சு அடிபடுகின்றது; ஆனால் அது இன்னும் வெகுதூரத்திலேயே!

கடந்த சில நாள்களாக சமாதானப் பேச்சுக்கள் பற்றிய செய்திகளே பத்திரிகைகளில் வெளிவருகின்றன. எனினும் சமாதானம் இன்னும் வெகுதூரத்திலேயே உள்ளது என்கிறது 'லக்மிம'' சிங்கள வார இதழ். 'லக்மிம' வில் வெளியான கட்டுரையின் தமிழாக்கத்தை இங்கு தருகின்றோம்.

சமாதானப் பேச்சுக்கள் குறித்துபல்வேறு கருத்துக்கள் வெளிவந்த வண்ணமுள்ளன.

ஒரு புறத்தில் அரசாங்கமும மறுபுறத்தில் எதிர்க்கட்சியும் பிறிதொரு புறத்தில் விடுதலைப் புலிகளும் அண்மையில் பேச்சுக்கள் குறித்து கருத்துவெளியிட்டுள்ளன.

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கா சமாதானப் பேச்சுக்கள் பற்றித் தெரிவித்த கருத்துக்கள் தலைப்புச் செய்தியாக பத்திரிகைகளில் வெளிவந்துள்ளன.

நிபந்தனைகள் எவையுமின்றி அரசு விடுதலைப் புலிகளுடன் பேச்சுக்களை நடத்தி— யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவந்து — இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணவேண்டும் என ரணில் தெரிவித்திருந்தார்.

நீதி, அரசமைப்பு விவகார அமைச்சர் ஜி. எல். பீரிஸும் சென்னையில் இடம்பெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் சமாதானப் பேச்சுக்களின் தேவைபற்றிக் குறிப்பிட்டிருந்தார்.

''நாங்கள் போராளிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தும் விருப்பத்தை மாத்திரம் கொண்டிருக்கவில்லை. அதை மிகவும் ஆவலுடன் எதிர்பார்க்கிறோம்'' என அமைச்சர் பீரிஸ் தெரிவித்தார்.

சமாதானப் பேச்சுக்கள் குறித்து புலிகள் தரப்பில் இருந்தும் கருத்து வெளியிடப்பட்டதாக இந்தியாவில் இருந்து வெளியாகும் ''இந்து'' பத்திரிகை தெரிவிக்கிறது. அந்தச் செய்தி கொழும்பு தமிழ் பத்திரிகையிலும் வெளியாகியிருந்தது. அதன்படி சமாதானப் பேச்சுக்கள் தொடர்பாக சிறிலங்கா அரசுக்கு அழுத்தம் கொடுக்குமாறு விடுதலைப்புலிகள் தென் ஆபிரிக்க ஜனாதிபதி நெல்சன் மண்டேலாவைக் கேட்டுள்ளனர்.

சிறிலங்கா அரசும் விடுதலைப் புலிகளும் யுத்தத்தை நிறுத்துவதற்காகவும் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காகவும் நிபந்தனைகளற்ற பேச்சுக்களை மேற்கொள்ள வேண்டும் என்றும் —

நிபந்தனைகள் விதிப்பின் பேச்சுவார்த்தை பயன்தரு விளைவினை ஏற்படுத்தாது என்றும் —

எனினும் ஒரு குறிப்பிட்ட கால எல்லைக்குள் பேச்சுவார்த்தைகள் முடிவுக்குக் கொண்டுவரப்பட வேண்டும் என்றும் ரணில் கருத்துத் தெரிவித்துள்ளார்.

பேச்சுவார்த்தைகளை மேற்கொள்வதற்காக, யுத்தத்தை நிறுத்த வேண்டியதில்லை எனவும் 1985 ஆம் ஆண்டில் பூட்டானின் தலைநகரமான திம்புவில் சிறிலங்கா அரசுக்கும் தமிழ்க் கட்சிகள் மற்றும் தமிழ் அமைப்புகளின் பிரதிநிதிகளுக்குமிடையே பேச்சுவார்த்தைகள் இடம்பெற்ற போது போர் நிறுத்தம் கடைப் பிடிக்கப்படவில்லை என்றும் ரணில் தெரிவித்துள்ளார்.

அதிகாரப் பகிர்வு தொடர்பான திட்டத்தை அரசு விடுதலைப்புலிகளுக்கு முன்வைப்பதாயின் அதற்கு முன்னர் நாட்டில் உள்ள ஏனைய கட்சிகளுடன் உடன்பாடு காண வேண்டும் எனவும் ரணில் தெரிவித்துள்ளார்.

ரணிலின் கருத்துப்படி வெளிநாட்டு மத்தியஸ்தம் ஏற்றுக் கொள்ளப்படக் கூடியதல்ல. பேச்சுவார்த்தைக்கு வெளிநாட்டு ஒத்துழைப்பு மாத்திரமே தேவை ஆகும். வெளிநாட்டு மத்தியஸ்தம் அல்ல. அரசாங்கத்தையும், விடுதலைப்புலிகளையும் சந்திக்க வைப்பதும் பேச்சுவார்த்தைகளுக்குத் தேவையான ஏனைய வசதிகளை வழங்குவதும் மாத்திரமே அந்த வெளிநாட்டு ஒத்துழைப்பாக இருக்க வேண்டும்.

தற்போதுள்ள நிலைவரத்தின்படி சிறிலங்காவில் பேச்சுவார்த்தைகள் மேற்கொள்ளப்படுவதற்கு வாய்ப்புக்கள் அரிது. எனவே பேச்சுவார்த்தைகளை வெளிநாட்டிலேயே மேற்கொள்ள வேண்டும்.

*பீரிஸ் - ரணில் கருத்தில் ஒற்றுமை*

பேச்சுவார்த்தைகள் தொடர்பாக அமைச்சர் பீரிஸ் தெரிவித்துள்ள கருத்துக்கள் அவ்வளவு விவரமாக இல்லை. இருப்பினும் வெளிநாட்டு மத்தியஸ்தம் தேவையில்லை என அவர் தெரிவித்துள்ளார். பேச்சுவார்த்தைகள் தொடர்பாக விடுதலைப் புலிகள் அமைப்பும் சிற்சில நிபந்தனைகளை நிறைவேற்ற வேண்டும் என அவர் கருதுவதாகத் தெரிகிறது. அரசியல் விடயங்கள் குறித்தே பேச்சுவார்த்தைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமே ஒழிய நாளாந்தப் பிரச்சினைகள் குறித்து அல்ல என்பதே அமைச்சரின் கருத்தாகும்.

விடுதலைப் புலிகளுடன் ஏதாவது ஓர் உடன்பாட்டுக்கு வருமுன்னர் அது தொடர்பாக அரசாங்கமும் எதிர்க் கட்சியும் இணக்கம்

**தமிழில்: கஜனி**

காண வேண்டும் என அமைச்சர் பீரிஸ் தெரிவித்துள்ளார்.

அமைச்சர் பீரிஸ் மற்றும் எதிர்க் கட்சித் தலைவர் ரணில் ஆகிய இருவரின் கருத்துக்களில் பல விடயங்கள் மிகவும் ஒத்தனவாக உள்ளன. சமாதானப் பேச்சு ஆரம்பிக்கப்பட வேண்டும் என இருவரும் தெரிவித்துள்ளனர்.

யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருக்கும் போதே பேச்சுவார்த்தை நடத்தலாம் எனவும் திம்புப் பேச்சுக்களும் யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருந்த வேளையிலேயே இடம் பெற்றது எனவும் ரணில் தெரிவித்துள்ளார்.

திம்புப் பேச்சுவார்த்தைகள் குறித்து ரணில் முற்றிலுமாக மறந்திருக்கக்கூடும், அல்லது திம்புப் பேச்சுவார்த்தைகள் மேற்கொள்ளப்பட்ட விதத்தை அவர் அறிந்திருக்கவில்லை.

அப்போது போர் நிறுத்தம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. திம்புப் பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ளுமாறு தமிழ் அமைப்புகளை இந்திய அமைச்சராகவிருந்த பி. சிதம்பரம் ஊக்குவித்தார்.

தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களான ஆலாலசுந்தரம் மற்றும் தர்மலிங்கம் ஆகியோர் படுகொலை செய்யப்பட்டதாலும் வவுனியாவிலும் திருகோணமலையிலும் இராணுவத்தினால் பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டதாலும் மீண்டும் அந்தப் போர் நிறுத்தம் முடிவுக்கு வந்தது.

ரணில் எதைக் கூறியுள்ள போதிலும் யுத்த நிறுத்தத்தை முதலில் மேற்கொள்ளாது சமாதானப் பேச்சுக்களை மேற்கொள்ள முடியுமா? என்பதே கேள்வி ஆகும்.

''வெற்றி உறுதி'' இராணுவ நடவடிக்கை தொடர்பாக இந்த நாட்டின் தென் பகுதியிலுள்ள மக்கள் கொண்டுள்ள எதிர்பார்ப்புகளுக்கு மாறாக யுத்த நிறுத்தம் மேற்கொள்வது தொடர்பான எந்தவொரு கருத்தையும் எந்தவொரு சிங்களத் தலைவராலும் வெளியிட முடியாது. இக் காரணத்தினாலேயே யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருக்கும் போதே பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ளலாம் என ரணில் தெரிவித்துள்ளார் என்று கூறலாம்.

யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்டாலும் யுத்த நிறுத்தத்தை மேற்கொள்வது தொடர்பாக உடன்பாடு காணப்பட்டால் மாத்திரமே அந்தப்பேச்சுவார்த்தைகள் பயன்தரும் விதத்தில் அமையும். எனவே அண்மையில் சமாதானப் பேச்சுவார்த்தைகள் மேற்கொள்ளப்படுவதற்கு வாய்ப்புக்கள் அரிதாகவே உள்ளன என்பது தெளிவாகத் தெரிகிறது.

*புலிகளின் நிபந்தனை*

பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ள நிபந்தனைகள் தேவையில்லை என ரணில் தெரிவிக்கிறார். இதை அரசாங்கத்திற்குமாத்திரம் தானா ரணில் எடுத்துரைக்கிறார். சமாதானப் பேச்சுக்களை மேற்கொள்வதாயின் 1995 இல் இடம்பெற்ற சூரியப்பிரகாசம் இராணுவ நடவடிக்கைக்கு முன்னர் படையினர் இருந்த நிலைகளுக்கு இராணுவம் வாபஸ்பெற வேண்டும் என விடுதலைப் புலிகள் தெரிவிக்கின்றனர் இதுவும் ஒரு நிபந்தனையே.

விடுதலைப் புலிகள் இந்த நிபந்தனையை விட்டுக் கொடுக்கத் தயாரா? எனத் தெரியவில்லை. தமிழ் மக்களின் ஏகபிரதிநிதிகள் தாங்களே என ஏற்றுக் கொள்ள வேண்டும் என புலிகள் கூறுகிறார்கள்.

விடுதலைப் புலிகள் ஆயுதங்களைக் கீழே வைக்க வேண்டும். குறித்த கால எல்லைக்குள் பேச்சுவார்த்தைகள் முடிக்கப்பட வேண்டும், தீர்க்கமான அரசியல் பிரச்சினைகள் குறித்தே பேச்சுவார்த்தைகள் மேற்கொள்ளப்படவேண்டும் என்பன போன்ற நிபந்தனைகளை அரசு முன்வைத்துள்ளது. ஆயுதங்களைக் கீழே வைக்க வேண்டும் என்பது ஐ. தே. கட்சியாலும் முன்னர் நிபந்தனையாக விதிக்கப்பட்டது.

பி. ரி. ஐ. செய்தி நிறுவனத்துடனான பேட்டியில் விடுதலைப் புலிகள் ஈழக் கோரிக்கையைக் கைவிட வேண்டும் என மற்றொரு நிபந்தனையையும் ஜனாதிபதி தெரிவித்திருந்தார்.

விடுதலைப் புலிகள் ஏதாவது ஓர் அரசியல் உடன்பாட்டிற்கு வரமுன்னர் ஈழக் கோரிக்கையைக் கைவிடுவார்களா? ஆயுதங்களைக் கீழே வைப்பார்களா? இல்லை.

மறுபுறத்தில் விடுதலைப் புலிகள் கூறுவதுபோல் இராணுவ நடவடிக்கைகளின் மூலம் கைப்பற்றிய பிரதேசங்களை பாதுகாப்புப் படையினர் கைவிடுவார்களா? அவ்வாறு அப்பிரதேசங்களைக் கைவிடுமாறு அரசாங்கம் கட்டளையிடுமா? இல்லை. ஐ. தே. கட்சி ஆட்சியில் இருந்தாலும் இது நடைபெற மாட்டாது.

*சமாதானம் வெகு தூரத்தில்*

உள்நாட்டு யுத்தம் நடைபெறும் ஒரு நாட்டிற்கு மிகவும் தேவைப்படுவது சமாதானமே. அதை உருவாக்கக் கூடிய மிகவும் நாகரிகமான வழிமுறை பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டு பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதே ஆகும். இருப்பினும் இந்த நாட்டில் உருவாகியுள்ள பிரச்சினையில் இரு தரப்பாரும் விதித்துள்ள நிபந்தனைகளால் பேச்சுவார்த்தை தொடர்பாக ஒருவரை ஒருவர் அண்மிக்க முடியாத நிலை உருவாகியுள்ளது.

ஒவ்வொரு தரப்பினரும் தத்தமக்கு ஏற்பட்ட அனுபவங்கள் மற்றும்பீதி காரணமாக இந்த நிபந்தனைகளை முன்வைத்துள்ளனர். எனவே இந்த நிபந்தனைகளை வாபஸ் பெறுவதும் அவர்களுக்கு முடியாத காரியமாகும்.

இவ்வாறான நிலையில் பேச்சுவார்த்தை பற்றிய கருத்துக்கள் ஓர் அரசியல் நாடகமே. ★

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## பெண் விற்பனையாளர்கள் தேவை

அச்சுவேலியில் புதிதாக ஆரம்பிக்கப்படவிருக்கும் மருந்தகம் (PHARMACY) ஒன்றுக்கு G. C. E. (O/L) பரீட்சையில் சித்தியடைந்த மருந்து விற்பனையில் அனுபவம் உள்ள அல்லது பழக விரும்பும் பெண் விற்பனையாளர்கள் தேவை.

மூன்று மைல் சுற்றாடலில் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

விண்ணப்ப முடிவு திகதி: 25 - 09 - 98

விண்ணப்பிக்கவும்

இல. 787, மே/பா உதயன்,
யாழ்ப்பாணம்.

(59220)



## பேக்கரி விற்பனைக்கு

பருத்தித்துறை நகரப்பகுதியில் சமீபத்தில் கட்டப்பட்ட ஒரு பேக்கரி காணியுடனும் உபகரணங்களுடனும் உடன் விற்பனைக்குண்டு. உடனடியாகவே பாண் உற்பத்தி தொடங்கலாம். விலை மற்றும் விவரங்களுக்கு தொடர்பு கொள்ளவேண்டிய முகவரிகள்:

செ. ஜெகசோதி
'செம்பருத்தி',
தும்பளை வீதி,
பருத்தித்துறை.

அல்லது

க. பாலசுப்பிரமணியம்
இலங்கை வங்கி,
பிரதேசக் காரியாலயம்,
யாழ்ப்பாணம்.

(59154)



## விசுவாசிகளுக்கான கூட்டம்

17 - 09 - 98 அசெம்பிளி ஒப் கோட், சாவகச்சேரி.
வியாழன் பிற்பகல் 4.00 மணி
(புதிய நேரம்)

20 - 09 - 98 இளம் கலைஞர் மன்றம், நல்லூர்.
ஞாயிறு பிற்பகல் 4.00 மணி
(புதிய நேரம்)

செய்தியாளர்: ஆஸ்திரேலியாவைச்சேர்ந்த
வண. L. B. சில்வபக்
(C. R. C. சபை தலைமைப் போதகர், பப்புவ நியூகினி)

அனைத்து சபை விசுவாசிகளும்
அன்புடன் அழைக்கப்படுகின்றீர்கள்.

குறிப்பு: சபைப்போதகர்கள் தயவாக இவ்வறிவித்தலை உங்கள் சபைகளில் அறிவிக்கவும்.

'விசுவாசத்தில் வளர வாய்ப்பைப் பயன்படுத்துங்கள்'

போதகர்,
சீயோன் தேவாலயம்,
யாழ்ப்பாணம்.

(59102)



## 2 ஆம் ஆண்டு நினைவலைகள்



மண்ணில் 01 — 10 — 1939

விண்ணில் 16 — 09 — 1996

### அமரர் பூதர் இரத்தினம்

(தெல்லிப்பழை ஐ. நா. சங்கத் தலைவர், கட்டட ஒப்பந்தகாரர், சிமெந்துத் தொழிற்சாலை ஊழியர்.)

திதி: 16 – 09 – 1998

எங்கள் அன்புத் தெய்வமே!
கண்ணிலே அருவியாய் நீர்பாய வாழ்கின்றோம்
உங்கள் நினைவில்.
ஆண்டுகள் இரண்டு சென்றாலும் உங்கள்
நினைவு மீண்டு கொண்டே இருக்கும்.

உங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

இல: 47,
மெமோறியல் ஒழுங்கை,
மானிப்பாய்.

– குடும்பத்தினர்.

(59222)


# செம்மணிப் புதைகுழி விவகாரம்

யாழ்ப்பாணம், செப். 16

செம்மணிப் பகுதியிலுள்ள புதைகுழிகளைத் தோண்டுவதற்கு அனுமதி கோரும் மனுக்கள் எதுவும் இதுவரை யாழ். நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவில்லை என்று நீதிமன்ற வட்டாரங்கள் தெரிவித்தன.

செம்மணியில் புதைகுழிகள் இருப்பது குறித்தோ அல்லது அதனை தோண்டுவது குறித்தோ யாழ். நீதிமன்றத்துக்கு உத்தியோகபூர்வமாக எதுவும் தெரிவிக்கப்படவில்லை.

செம்மணிப் புதைகுழிகள் தொடர்பாக யாழ். நீதிமன்றத்துக்கு அறிவிக்கப்பட வேண்டும் என்று நீதித்துறை நிபுணர்கள் கருத்து வெளியிட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

(இ–5)

# வேலைத் திட்டங்களுக்கு அங்கீகாரம்

உலக உணவுத்திட்டத்தின் உதவியுடன் யாழ். மாவட்டத்தில் 59 வேலைத்திட்டங்களை மேற்கொள்வதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

இந்த வேலைத் திட்டங்களின் கீழ் 25 குளங்கள், 22 வாய்க்கால்கள், 12 விவசாய வீதிகள் புனரமைப்புச் செய்யப்படவுள்ளன. இதில் தற்போது 38 வீதமான திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

(இ–5)

# படையினர் காவடி

செம்பியன்பற்று செப். 16

வடமராட்சி நாகர்கோயிலை அண்மித்துள்ள முகாம்களில் தங்கியுள்ள சுமார் 20 படையினர் கடந்த 6 ஆம்திகதி நாகர்கோயிலுக்குக் காவடி எடுத்தனர்.

அன்றைய தினம் நாகர்கோயிலில் அப்பகுதி படை அதிகாரியின் தலைமையில் விசேட பூசை வழிபாடுகளும் நடைபெற்றன.

நாகர்கோயிலிலுள்ளபாம்புகள் இப்பகுதிப் படையினருக்கு தினமும் தொல்லை கொடுத்துவருவதை அடுத்தே காவடி எடுத்து நேர்த்திக்கடன் நிறைவேற்றப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் இப்பகுதி படை அதிகாரியின் மேசையில் நாகபாம்பு இருந்ததும், நாகர்கோயில் அர்ச்சகரினால் அது மருதம் பொந்தினுள் சேர்க்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

(இ–8–36)

# அளம்பிலில் படகுகள் அழிப்பு

முல்லைத்தீவு அளம்பில் கரையோரப் பகுதிகளில்விடுதலைப் புலிகளின் நான்கு படகுகளை கடற்படையினர் தாக்கியழித்துள்ளதாக பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமையகம் அறிவித்துள்ளது.

நேற்று முன்தினம் அதிகாலை கண்காணிப்புப் பணியில் ஈடுபட்டிருந்த கடற்படையினர் விடுதலைப் புலிகளின் படகுகளின் நடமாட்டத்தை அவதானித்து அப்படகுகள் மீது தாக்குதல் நடத்தினர் என்றும்—

அச்சமயம் நான்கு படகுகள் முற்றாக அழிக்கப்பட்டதாகவும் விடுதலைப் புலிகள் தரப்பில் எட்டுப் பேர் பலியானார்கள் எனவும்—

நடவடிக்கைத் தலைமையகம் மேலும் அறிவித்துள்ளது.

(ஐ–9)

# கிழக்கில் படையினர் மத்தியிலும் கொலரா!

மட்டக்களப்பு, செப் 16

பொலநறுவை மாவட்டத்தில் பரவி வரும் கொலரா நோய் அறிகுறிகள் வெலிக்கந்த பிரதேச படையினர் மத்தியிலும் காணப்படுவதாக வெலிக்கந்த வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

வயிற்றோட்டத்தால் பாதிக்கப்பட்ட 14 இராணுவத்தினர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். அவர்களில் ஒருவர் கொலராவால் பீடிக்கப்பட்டிருப்பது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை—

அத்துக்கல அகதி முகாமில் கொலரா காரணமாக நேற்று முன்தினம் ஒருவர் உயிரிழந்தார்.

வயல் அறுவடை மற்றும் வியாபார நடவடிக்கைகளின் நிமித்தம் பொலநறுவைக்குச் சென்று திரும்பிய மட்டக்களப்பு வாசிகள் பலருக்கும் கொலரா பரவியுள்ளது. இதுவரை மூவர் பலியாகியுள்ளனர். சுமார் 25 பேர் ஆஸ்பத்திரிகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

(ஐ–21)

## கைதான பின் இறந்த

# இளைஞனின் உடற்கூறு ஆய்வுக்காக கொழும்புக்கு!

படையினரால் விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்ட பின்னர் மாடியில் இருந்து வீழ்ந்து மரணமானதாகத் தெரிவித்து பொலீஸாரால் கடந்த சனியன்று யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்ட இளைஞரின் உடற்கூறு மேலதிக பரிசோதனைக்காக கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

யாழ். நகரில் உள்ள ஒலிப்பதிவு நிலையம் ஒன்றில் வேலை செய்து வந்த மேற்படி இளைஞரின் மரணம் தொடர்பாக மேலதிக விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று அவரது குடும்பத்தினர் கோரி உள்ளனர்.

யாழ்ப்பாணம் மவுண் கார்மல் வீதியைச் சேர்ந்த ஞானசிங்கம் அன்ரன் குணசேகரம் (வயது 26) என்ற குடும்பஸ்தரே சடலமாக ஒப்படைக்கப்பட்டவராவார். (ஐ-உ)

## நிதி ஒதுக்கீடு விவகாரம்:

# இழுபறியைத்தீர்ப்பதற்கு நாளைகொழும்பில் மாநாடு

கொழும்பு, செப். 16

யாழ். மாவட்டத்தில் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் கீழ் நிதி ஒதுக்கீடு செய்வது குறித்து ஈ.பி.டி.பி. தலைவர் டக்ளஸ் தேவானந்தாவுக்கும், அவரின் சுயேச்சைக் குழுவைச் சேர்ந்த எம். பிக்களான ஆர். இராமமூர்த்தி, ஆர். இராமேஸ்வரன், முஸ்லிம் காங்கிரஸ் எம். பியான ஐ. எம். இலியாஸ் ஆகியோருக்கும் இடையிலான பிரச்சினைக்கு—

தீர்வு காண்பதற்காக திட்ட அமுலாக்கல் அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே நாளை வியாழக்கிழமை மாநாடு ஒன்றைக் கூட்டவுள்ளார்.

யாழ். அபிவிருத்திக் குழுத் தலைவர் டக்ளஸ் தேவானந்தா சம்பந்தப்பட்ட மூன்று எம். பிக்கள், முஸ்லிம் காங்கிரஸ் பொதுச் செயலாளர் ரவூப் ஹக்கீம், யாழ். அரச அதிபர் எஸ். சண்முகநாதன் ஆகியோர் இந்த மாநாட்டுக்கு அமைச்சரால் அழைக்கப்பட்டுள்ளனர்.

இதே நேரம் இப்பிரச்சினைக்குத் தீர்வு வேண்டி டாக்டர் ஐ. எம். இலியாஸ் புத்தளத்தில் ஞாயிற்றுக்கிழமை ஆரம்பித்த சத்தியாக்கிரகம் தொடர்கிறது. இந்தச் சத்தியாக்கிரகத்துக்கு ஆதரவு தெரிவித்து எம். பிக்களான ஆர். இராமமூர்த்தி, ஆர். இராமேஸ்வரன் ஆகியோரும் நேற்றுமுன்தினம் அதில் பங்கு கொண்டனர்.


## உடுவில் மகளிர் கல்லூரி

வெளிவாரிப் பட்டப் படிப்பு
(யாழ். பல்கலைக்கழகம்)
G. A. Q., B. A. (Part One), B. A. Final
வகுப்புகள் ஆரம்பமாகிவிட்டன.

குறிப்பு: சகல பாடங்களும் கற்பிக்கப்படும்.

தட்டெழுத்து. சுருக்கெழுத்து
(ஆங்கிலம், தமிழ்)
விசேட ஆங்கில வகுப்புகளும்
ஆரம்பமாகின்றன.

அனுமதிப் பத்திரங்களைக் கல்லூரி அலுவலகத்தில் உடன் பெற்றுக் கொள்ளுங்கள்.

நிர்வாகி,
உடுவில் மகளிர் கல்லூரி.

(சி/4884)



## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

### அமரர் கதிரேசு வல்லிபுரம்

இறைவனடி எய்திய கதிரேசு வல்லிபுரம் அவர்களின் முதலாம் ஆண்டு நிறைவை ஒட்டி அன்னாரின் ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

- குடும்பத்தினர்

சுன்னாகம் கிழக்கு,
சுன்னாகம்.

(59224)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## பக்கம் மாறுவாரா?

அரசாங்கம் விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் என்ற குரல் இப்போது பல தரப்புகளில் இருந்தும் ஒலிக்கின்றது. அதே வேளை இந்தக் கோரிக்கைக்கு அரசு செவி சாய்த்துச் செயலில் இறங்குமா என்ற கேள்வியும் எழுகிறது.

விடுதலைப் புலிகளும் பேச்சுவார்த்தைக்குத்தயாராகவே உள்ளனர் மூன்றாந் தரப்பு மத்தியஸ்தத்துடன் நிபந்தனையற்ற பேச்சுக்களில் கலந்து கொள்வதற்கு அவர்கள் தயார்.

ஆனால் அரசாங்கமோ விடுதலைப் புலிகளுடன் பேசுவதானால், நிபந்தனைகளுடன் தான் பேச முடியும் என்ற நிலைப்பாட்டைக் கொண்டுள்ளது. ஜனாதிபதி சந்திரிகாவும், பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்தவும் நிபந்தனையுடன் மட்டுமே விடுதலைப் புலிகளுடன் பேச முடியும் என்று தெரிவித்திருக்கிறார்கள். மூன்றாந் தரப்பு மத்தியஸ்தத்தையும் அரசு அடியோடு நிராகரித்து உள்ளது.

ஆனால் —

நீதி. அரசமைப்பு விவகார அமைச்சர் பேராசிரியர் ஜி. எல். பீரிஸ், செய்தியாளர் மாநாடு ஒன்றில் தெரிவித்திருக்கும் கருத்து அரசு தனது நிலைப்பாட்டை மாற்றக்கூடும் என்று சுட்டுவதாக உள்ளது.

விடுதலைப் புலிகளுடன் பேச்சு வார்த்தை நடத்த வேண்டும்என்று தற்போது முன்வைக்கப்படும் யோசனைகள்– கோரிக்கைகள்– தீர்வுக்கு வழி கோலும் என்று அவர் நம்பிக்கை தெரிவித்திருக்கிறார்.

இனப்பிரச்சினைத் தீர்வு விவகாரத்தில் அமைச்சர் பீரிஸுக்கும் அமைச்சர் அனுருத்தவுக்கும் இடையில் கருத்து வேற்றுமை உண்டு.

போரைத் தொடர்வதனை அமைச்சர் பீரிஸ் விரும்பவில்லை; இனப் பிரச்சினைக்குத் தீர்வு கண்டாக வேண்டும் என்பதில் அவர் ஏனைய அமைச்சர்களை விட ஆர்வமாக உள்ளார்; என்பது அவரோடு நெருங்கியவர்கள் எடுத்துள்ள கணிப்பு.

அவ்வாறிருந்த போதிலும் ஜனாதிபதி தெரிவிக்கும் கருத்துக்களை நியாயப்படுத்தும் வகையில், சரியாக்கும் விதத்தில் அவ்வப்போது அமைச்சர் பீரிஸ் பேசுகிறார்

அமைச்சர் அனுருத்த விடுதலைப்புலிகளைப் பலவீனப்படுத்திய பின்னரே பேச்சுவார்த்தைக்குப் போக வேண்டும் என்ற நிலைப்பாட்டை உடையவர். அரசுக்குக் கிடைத்த இராணுவ வெற்றிகளைப் பழுதாக்கி விடாமல், பயனற்றதாக்கி விடாதவாறு நிபந்தனைகள் விதித்துப் பேச வேண்டும் என்று விரும்புபவர்.

இவர்கள் இருவரில் இதுவரை அனுருத்தவின் பக்கமே ஜனாதிபதி அதிகமாகச் சார்ந்து நிற்கிறார். ஆகையால் அமைச்சர் பீரிஸின் நம்பிக்கை நிறைவேறுவதாயின், ஜனாதிபதி பக்கம் மாறவேண்டும்.

ஜனாதிபதித் தேர்தலில் தமது வெற்றியை நாடி சந்திரிகா பக்கம் மாறினால் மட்டுமே இப்போது ஒலிக்கும் குரல்கள் பேச்சுக்கு வழிகோலும். இல்லையேல் எதுவுமே அசையாது.

# குடாநாட்டில் குடியிருப்பு தட்டுப்பாடு;
# 20 ஆயிரம் வீடுகள் உடனடித் தேவை!

### நடந்ததும் நடவாததும்

யாழ்ப்பாணக் குடாநாட்டில் கடந்த இரண்டு வருடங்களாக மேற்கொள்ளப்பட்ட மீளக்குடியமர்வு மற்றும் புனர்வாழ்வுத்திட்டங்கள், செயல் முறைகள் குறித்த கண்ணோட்டம் ஒன்றை, யாழ். மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையம் அண்மையில் அறிக்கை வடிவத்தில் வெளியிட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மக்கள் நலன் — வசதி— கருதி நடந்ததும் நடைபெறாததும் குறித்துப் புள்ளிவிவரங்களுடன் விலாவாரியாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரஸ்தாப கண்ணோட்ட அறிக்கை உதயனில் பகுதி பகுதியாக அவ்வப்போது வெளிவரும்.

1983 - 1996 ஆம் ஆண்டு காலப் பகுதியில் யாழ்ப்பாணக் குடா நாட்டில் போர் கால சூழல் நிலவியது. இப்போர் பாரிய மனித இழப்புக்களையும் சொத்து இழப்புக்களையும் ஏற்படுத்தியதுடன் இப்பகுதியில் சமூக பொருளாதார கீழ் கட்டுமான அமைப்பில் பெரியதோர் குழப்பத்தையும் ஏற்படுத்தியது.

காலத்திற்கு காலம் மேற்கொள்ளப்பட்ட பல இராணுவ நடவடிக்கைகள் காரணமாக அகதிகள் எண்ணிக்கை அதிகரித்ததுடன் ஒக்ரோபர் 1995 இல் சுமார் 5 இலட்சத்திற்கு உயர்ந்தது.

1996 மே மாதத்தில் அரசு இரண்டு வருட மீள் குடியேற்ற, புனரமைப்பு திட்டம் ஒன்றை அமுல் செய்வதின் மூலம் நான்கு பிரதான இலக்குகளை அடைய முடியும் என அறிவித்தது.

அவை வருமாறு:

1. இடம் பெயர்ந்த/பாதிக்கப்பட்ட குடும்பங்கள் அல்லது தனிநபர்களுக்கு உடனடி நிவாரணம்.

2. இடம் பெயர்ந்த குடும்பங்களுக்கு அல்லது தனி நபர்களுக்கு மீள் குடியேற்றம் அல்லது மறுவதிவிடம்:

3. பாதிக்கப்பட்ட தனியார், பொது சொத்துடமைகளை மீள ஆரம்பித்து அத்தியாவசிய சேவைகளை தொடர்ந்து ஆற்றக் கூடிய தேவைக்கான வகையில் புனரமைத்தல்.

4. வழமையான பொருளாதார நடவடிக்கைகளை மீள ஆரம்பித்து யாழ். குடாநாட்டை நாட்டின் பிரதான பொருளாதார நீரோட்ட நடவடிக்கையுடன் இணைத்தல்.

இந்த அறிவிப்புக் குறித்து 1996 ஆம் ஆண்டின் மக்கள் மிகவும் நம்பிக்கையுடன் இருந்தார்கள். ஆனால் இரண்டு வருடங்களின் பின்பு தங்களின் பல பிரச்சினைகள் தீர்க்கப்படாமையால் ஏமாற்றமடைந்துள்ளார்கள். அரச சார்பற்ற நிறுவனங்கள் மக்களுடன் நெருங்கிப்பழகுவன, எனவே அவர்களின் கருத்துக்கள் இந்த அறிக்கையில் பிரதிபலிக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கை கீழ் காணும் வகையில் இரண்டு பகுதிகளாக வகுக்கப்பட்டுள்ளன.

பகுதி 1: தற்போதைய அடிப்படை பிரச்சினைகள்; அமுல் செய்யப்பட்ட செயற்திட்டங்களும், திட்ட நிகழ்வு நிரலில் திட்டப் பெறுபேறுகளின் முன்னேற்றம் முதலியவை சம்பந்தமான ஓர் பொது மீளாய்வு.

பகுதி 2: வடக்கின் மீள் குடியேற்ற புனரமைப்பு சபையின் சென்ற இருவருட கால செயற்பாடு பற்றிய சில கருத்துக்கள்.

பல நிர்ப்பந்தங்கள்காரணமாகத் திட்டத்தைப் பற்றி ஒரு முழுமையான மதிப்பீடு மேற்கொள்ள முடியவில்லை. எங்களின் மீளாய்வை சுதந்திரமானதும், தகுதி வாய்ந்ததுமான அரசினால் நியமிக்கப்பட்ட ஒரு குழுவினால் மேற்கொள்ளப்பட வேண்டிய முழுமையான மதிப்பீட்டின் தேவையை வலியுறுத்தும் ஒரு பூர்வாங்க மதிப்பீடாகக் கொள்ளலாம். பெற்றுக் கொள்ளும் படிப்பினைகள் திட்டங்களை வருங்காலத்தில் திட்டமிடவும், அமுலாக்கம் செய்யவும் உதவும்.

பௌதீக, நிதி சம்பந்தமான முன்னேற்றங்கள் பற்றிய சரியான தரவுகளை வெளியிடுவதில் அதிகாரிகள் பின்னடிப்புச் செய்வதால் பெற்றுக் கொள்ள முடியவில்லை. ஆகவே புள்ளி விவரங்கள் கிட்டத்தட்ட என்ற ரீதியிலேயே இந்த அறிக்கையில் தரப்பட்டுள்ளது.

#### மீட்கப்பட்ட மீட்கப்படாத பகுதிகள்

யாழ். குடாநாட்டின் பெரும் பகுதி ''ரிவிரெச- 2'' நடவடிக்கைகள் மூலம் 1996 ஏப்ரல் — 1998 காலப் பகுதியில் மீட்கப்பட்டது. தற்பொழுது ''மீட்கப்பட்ட, மீட்கப்படாத'' பகுதிகள் என யாழ். குடாநாட்டில் காணப்படுகின்றன. ''மீட்கப்பட்ட'' பகுதிகளில் உச்ச பாதுகாப்பு வலயம், தடை செய்யப்பட்ட வலயம் எனக் காணப்படுகின்றன. உச்சப் பாதுகாப்பு வலயத்தில் மக்கள் குடியேற அனுமதிக்கப்படுவதில்லை; தடை செய்யப்பட்ட வலையத்தில் அப்பகுதியில் வசிக்கும் மக்கள் மாத்திரமே உட் செல்ல அனுமதிக்கப்படுகின்றனர்.

பாதுகாப்பு என்ற போர்வையின் கீழ் மக்களின் நடமாட்டம், பொருள்கள் எடுத்துச் செல்லல் (போக்குவரத்து), வருமான ஊக்குவிப்பு முயற்சிகள், சமூக, கல்வி, முயற்சிகள் போன்ற தடைகள் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன. இது சாதாரண மக்கள் அமைதியுடன் வாழ்வதற்கு உகந்த ஒரு சூழல் அல்ல.

#### புனர்வாழ்வு 1996 மே

1996 ஆம் ஆண்டில் வடக்கின் புனர்வாழ்வு, புனரமைப்புத் திட்டப் பொறுப்புக்கள், அரசினால் வடக்கின் மீள் குடியேற்றப் புனரமைப்பு அதிகார சபைக்கு வழங்கப்பட்டது. 1996 மே மாதத்தில் வடக்கின் மீள் குடியேற்றப் புனரமைப்பு அதிகார சபை மேற்கூறிய வேலைக்காக ஒரு திட்டத்தை வகுத்தது. இதில் யாழ்ப்பாணக் குடாநாட்டு மக்களுக்கு உடனடி நிவாரணத்திற்கும் வசதி செய்யப்பட்டிருந்தது. மதிப்பீடு இரண்டு பகுதிகளாக வகுக்கப்பட்டுள்ளது.

பகுதி 1— 506 கோடியே 80 லட்சம் ரூபா.

உணவு நிவாரண உதவி இடம் பெயர்ந்த மக்களுக்காக மீள் குடியேற்ற புனர்வாழ்வு உதவிகள் வழங்கல்.

பகுதி 2 — 860 கோடியே 90 லட்சம் ரூபா.

பௌதீக உடைமைகளை புனரமைப்பு, புனருத்தா

(8 ஆம் பக்கம் பார்க்க)

# சுமார் $7\frac{1}{2}$ லட்சம் கிலோ உப்பு செம்மணி உப்பளத்தில் தேக்கம்

யாழ்ப்பாணம், செப். 16

யாழ். செம்மணியிலுள்ள உப்பளத்தில் 7 லட்சத்து 60 ஆயிரம் கிலோ உப்பு தேக்கமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

1997, 98 ஆம் ஆண்டுகளில் உற்பத்தி செய்யப்பட்ட இந்த உப்பு விற்பனை செய்யப்படாத நிலையிலிருப்பது குறிப்பிடத்தக்கது.

யாழ். குடாநாட்டின் தேவைக்கென கொழும்பிலிருந்து உப்பு இறக்குமதி செய்யப்பட்டு வருவதாகவும்—

இந்த இறக்குமதியை நிறுத்தி குறிப்பிட்ட உப்பினை யாழ். மாவட்டத் தேவைகளுக்கு பயன்படுத்துமாறும்— யாழ். அரச அதிபர் க. சண்முகநாதனிடம் கோப்பாய் பிரதேச செயலர் கே. கேதீஸ்வரன் கேட்டுள்ளார்.

இதனை ஏற்றுக்கொண்ட யாழ். அரச அதிபர், செம்மணியில் தேங்கியுள்ள உப்பை மக்களின் தேவைக்காகப் பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்துள்ளார். (இ-5)

## மலசலகூடம் திருத்த உதவி

நவாலி, செப். 16

யுனிசெப் நிறுவனத்தினால் ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் இந்த ஆண்டு 30 மலசல கூடங்கள் திருத்தப்படும்.

இவற்றுக்கு தலா 5 ஆயிரம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. (இ-100)

# விதை உருளைக் கிழங்கு அடுத்த மாதம் வந்து சேரும்

யாழ்ப்பாணம், செப் 16

யாழ். மாவட்டத்திற்கு எடுத்து வருவதற்கான விதை உருளைக்கிழங்கிற்குக் கொழும்பில் 40 லட்சம் ரூபா முற்பணம் செலுத்தப்பட்டுள்ளது.

அடுத்த மாதம் விதை உருளைக்கிழங்கு கப்பல் மூலம் யாழ்ப்பாணத்திற்குக் கொண்டு வரப்பட்டு விவசாயிகளுக்கு விநியோகிக்கப்படவுள்ளது.

விதை உருளைக் கிழங்கை யாழ்ப்பாணத்திற்குக் கொண்டு வருவதற்குக் கப்பலில் இட ஒதுக்கீடு செய்வதற்கான ஏற்பாடுகளை யாழ். அரச அதிபர் மேற்கொண்டுள்ளார். (இ-5)

### நாளை

புரட்டாதி - 01

வியாழக்கிழமை

திதி: துவாதசி முன்இரவு 08.11 வரை.

நட்சத்திரம்: பூசம் காலை 06.09 வரை.

சுபநேரம்: 07.33 -09.03

ராகுகாலம்: 01.33 - 03.03

(பகலுக்கும் இரவுக்கும் பழையநேரப்படி)

### உதயவாக்கு

கேட்டுப் பெறும் அன்பு சிறந்தது ஆனால் கேட்காமலேயே கொடுக்கப்படும் அன்பு இன்னும் சாலச் சிறந்தது. [illegible]

# இராணுவ மரியாதைகளுடன் மெண்டிஸின் இறுதிசடங்கு

கொழும்பு, செப். 16

யாழ். மாநகரசபைக் கட்டடத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற குண்டு வெடிப்பில் பலியான யாழ். நகர படைத் தளபதி மேஜர் ஜெனரல் சுஸந்த மெண்டிஸினதும் ஏனைய இராணுவ பொலீஸ் உத்தியோகத்தர்களினதும் மரணச் சடங்குகள் திங்கள் பிற்பகல் பூரண இராணுவ, பொலீஸ் மரியாதைகளுடன் நடைபெற்றன.

மேஜர் ஜெனரல் சுஸந்த மெண்டிஸின் பூதவுடல் அவர் கல்வி கற்ற கண்டி சென். சில்வஸ்டர் கல்லூரியில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது. பின்னர் ஆசிரியர்களும் மாணவர்களும் அவரது பூதவுடலை இராணுவத்தினரிடம் கையளித்தனர். அவரது மரணச் சடங்குகள் மஹியாவை மயானத்தில் பிற்பகல் 4. 30 மணிக்கு பூரண இராணுவ மரியாதையுடன் இடம் பெற்றன.

கண்டி மேற்றிராணியார் இறுதிஆராதனையை நடத்தி வைத்தார்.

இவரது மரணம் குறித்து ஜனாதிபதி விடுத்துள்ள அனுதாபச் செய்தி திருமதி மெண்டிஸிடம் அவரது இல்லத்தில் வைத்து ஜனாதிபதியின் உதவிச் செயலாளரினால் கையளிக்கப்பட்டது. மரணச் சடங்கில் இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் றொஹான் தளுவத்தையும் கலந்து கொண்டார். (ஐ-9)

## பாடசாலை அபிவிருத்திச் சபை

செம்பியன்பற்று, செப். 16

வடமராட்சி கிழக்கு மருதங்கேணி கல்விக்கோட்டத்தில் உள்ள மாமுனை அ. த. க. வித்தியாலயத்துக்கென பாடசாலை அபிவிருத்திச் சபை ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. (இ-36)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீடுகளுக்கான தொலைபேசி தற்போதைக்குக் கிடையாது

## பரிவர்த்தனை அளவு அதிகரித்த பின்பே

யாழ்ப்பாணம், செப். 16

வடக்குக்கான புனர்வாழ்வு, புனரமைப்பு அதிகார சபையின் கீழ் தொலைபேசி இணைப்பை முன்னுரிமை அடிப்படையில் வழங்குவதற்காக அரசினால் நியமிக்கப்பட்ட குழுவுக்கு வீடுகளுக்குத் தொலைபேசி இணைப்புக் கோரி தனியாரிடமிருந்து விண்ணப்பங்கள் அதிகளவில் கிடைத்துள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் தொலைபேசி பரிவர்த்தனையின் அளவு அதிகரிக்கப்பட்ட பின்னரே தனியார் வீடுகளுக்கான இணைப்புகள் வழங்கப்படவுள்ளன. அதுவரை மேற்படி விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட மாட்டாது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரச நிறுவனங்கள்—

யாழ்ப்பாணத்தில் அபிவிருத்தி வேலைகளில் ஈடுபட்டுள்ள நிறவனங்கள்—

வியாபார நிறுவனங்கள்—ஆகியவற்றுக்கு மட்டுமே முன்னுரிமை அடிப்படையில் தொலைபேசி இணைப்புக்கள் வழங்கப்படும்.

பதிவிலக்கம், வருமான விவரங்கள் ஆகியவற்றை உள்ளடக்காத வியாபார நிலையங்களின் விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட மாட்டாது என்றும்—

ஏற்கனவே இயங்கி வரும் தொலைபேசி உள்ள நிறுவனங்கள் மேலதிக இணைப்பைப் பெறுவதற்கு, இச்சேவையை நடத்துவது தொடர்பாக ''ரெலிகொம்'' நிறுவனத்துடன் பதிவு செய்து கொண்ட தொலைபேசி இலக்கம், வருமான விவரங்கள் போன்றவற்றை விண்ணப்பப் படிவத்தில் குறிப்பிட்டிருக்க வேண்டும் என்றும்—

தொலைபேசி நிலையங்களை ஆரம்பிப்பதற்கான விண்ணப்பங்களை அனுப்புபவர்கள் மேற்படி விவரங்களுடன் அப்பகுதிப் பிரதேச செயலரின் உறுதிப்படுத்திய கடிதத்தையும் விண்ணப்பத்துடன் அனுப்ப வேண்டும் என்றும் - புனர்வாழ்வு, புனரமைப்பு அதிகார சபை வட்டாரங்கள் தெரிவித்தன.

மேற்படி விவரங்களை உள்ளடக்காத விண்ணப்பங்கள் அனைத்தும் நிராகரிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

(இ-8-100)

### கட்டுகஸ்தோட்டையில்

# புளொட் குழுவினர் மீது பொலீஸார் விசாரணை

புளொட் அமைப்பின் உபதலைவர் என். மாணிக்கதாஸனும், அவரது உதவியாளர்கள் 9 பேரும் கண்டி கட்டுகஸ்தோட்டைப் பகுதியில் வைத்து இரு தடவைகள் பொலீஸாரால் விசாரிக்கப்பட்டனர்.

கண்டியில் இருந்து வரும் வழியில் கட்டுகஸ்தோட்டை சோதனை நிலையத்தில் பொலீஸார் அவர்களைத் தடுத்து நிறுத்தி விசாரித்தனர் என்றும்—

'புளொட்' அமைப்பினர் என்பதை ஆதாரத்துடன் நிரூபித்ததை அடுத்து பொலீஸார் தொடர்ந்து செல்ல அவர்களை அனுமதித்தனர் எனவும்—

ஆனால் சிறிது தூரம் சென்றபின்னர் புளொட்குழுவினரை பொலீஸார் மீண்டும் இடை மறித்து விசாரணை செய்ததாகவும்—

புளொட் அமைப்பு தெரிவித்துள்ளது.

பொலீஸார் அநாகரிகமாக நடந்து கொண்டதாகத் தெரிவித்து இந்தச் சம்பவம் தொடர்பாக 'புளொட்' தலைமைச் செயலகம் கண்டன அறிக்கை ஒன்றைவிடுத்தது.

(ஐ)

### தேர்தல் ஆணைக்குழு பற்றிய

# ஐ.தே.கவின் கூட்டத்தை கட்சிகள் புறக்கணித்தன

கொழும்பு, செப். 16

சுதந்திர தேர்தல் ஆணைக்குழு, சுதந்திர பொலீஸ் சேவை ஆணைக்குழு, சுதந்திர பொதுச் சேவை ஆணைக்குழு ஆகியன குறித்து ஐ.தே.க. வெளியிட்டுள்ள யோசனைகள் தொடர்பாக ஆராயும் ஆலோசனைக் கூட்டம் திங்களன்று இலங்கை மன்றக் கல்லூரியில் நடைபெற்றது

அரசாங்கக் கட்சிப் பிரமுகர்கள் எவரும் இக்கூட்டத்தில் கலந்து கொள்ளவில்லை. ஈ.பி.டி.பி, ஈ.பி.ஆர்.எல்.எவ்., ரெலோ உட்பட சில சிறிய கட்சிகளும் பல்வேறு ஸ்தாபனங்களின் பிரதிநிதிகளும் அதில் கலந்து கொண்டு உரையாற்றினர்.

ஜே.வி.பி., ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், தமிழர் விடுதலைக் கூட்டணி, லங்கா சமசமாஜக் கட்சி, மக்கள் ஐக்கிய முன்னணி, இலங்கை முற்போக்கு முன்னணி, கம்யூனிஸ்ட் கட்சி, தொழிற் சங்கங்கள் என்பன கூட்டத்தில் பங்கு பற்ற இயலாமை குறித்து அறிவித்திருந்தன.

மல்வத்த, அஸ்கிரிய பீடங்களின் மகாநாயக்கர்கள் ஓர் அரசியல் கட்சியின் கூட்டத்தில் கலந்து யோசனைகள் தெரிவிப்பது பயனற்றது என்று காரணம் காட்டி இந்தக் கூட்டத்தில் கலந்து கொள்ளவில்லை எனத்தெரிவிக்கப்பட்டது.

(ஐ-9)

# ஒருங்கிணைப்புக் கூட்டம்

செம்பியன்பற்று, செப் 16

வடமராட்சி கிழக்கு மருதங்கேணி உதவி அரச அதிபர் செயலகத்தின் ஒருங்கிணைப்புக் கூட்டம் இன்று புதன் கிழமை அம்பனில் உள்ள உதவி அரச அதிபர் செயலக உபபணிமனையில் நடைபெறும்.

(இ - 36)

# இரு எழுதுநர்கள்

செம்பியன்பற்று செப் 16

வடமராட்சி கிழக்கு மருதங்கேணி உதவி அரச அதிபர் செயலகத்திற்கு 9 ஆம் திகதி முதல் இரு அமைய எழுதுவினைஞர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

மருதங்கேணி உதவி அரச அதிபர் செயலகத்தில் ஆளணி பற்றாக்குறை நிலவியது தெரிந்ததே.

(இ - 36)

# குடாநாட்டில் குடி...

(ஏழாம் பக்கத் தொடர்)

ரணம் செய்தல், இடம் பெயர்ந்த மக்கள் தங்கள் வழமையான பொருளாதார செயற்பாடுகளை மீள ஆரம்பிப்பதற்குத் தேவையான உதவிகளை வழங்கல்.

மேற்கூறிய திட்ட நிகழ்வு இரண்டு வருட காலத்தில் முடிவடையும்.

### உள்நாட்டில் இடம் பெயர்ந்த மக்களின் உடனடித் தேவைகள்

1995ஒக்ரோபரில் 'ரிவிரச' நடவடிக்கையின் பொழுது சுமார் 500.000 மக்கள் தங்கள் நிரந்தர வதிவிடங்களை விட்டு வடமராட்சி, தென்மராட்சி, வன்னிப் பிரதேசங்களுக்குச் சென்றார்கள். உள்நாட்டில் இடம் பெயர்ந்தோரில் ஒரு பகுதியினர் ஏப்பிரல் 1996க்குப் பின்பு தங்கள் சொந்த வதிவிடங்களுக்குத் திரும்பி வந்தார்கள்.

திரும்பி வந்தோரின் உடனடித் தேவைகள்:

(அ) வதிவிடம் (ஆ) உணவுப் பொருட்கள், தண்ணீர் உட்பட, (இ) போக்குவரத்து, (ஈ) சுகாதார சேவைகள், முதலியன.

### வதிவிடம்

1. யாழ்குடாநாட்டின் தற்போதைய சனத்தொகை 481,000 ஆகும். அவர்களின் வதிவிடங்களை கீழ் வருமாறு வகுக்கலாம்.

தங்கள் வீடுகள் முற்றாக அழிக்கப்பட்டமையாலும், அல்லது தங்கள் வீடுகள் பாதுகாப்பு வலயத்தினுள் அகப்பட்டதனாலும், வீடு வசதி அற்ற 5,600 மக்கள் அகதிமுகாம்களில் வாழ்கின்றார்கள்.

2. சுமார் 54,000 மக்கள் மேற்கூறிய காரணங்களால் தங்களின் நண்பர்கள், உறவினர்கள் வீடுகளில் வசிக்கின்றார்கள்.

3. சுமார் 421,000 மக்கள் தங்கள் வளவுகளில் வாழ்கின்றார்கள். இவர்கள் பலரின் வீடுகள் சேதம் அடைந்துள்ளன. அவர்கள் தற்காலிக வதிவிடங்கள் அமைத்து தங்களைச் சமாளித்துக் கொள்கின்றார்கள். வதிவிடம் அடிப்படைத் தேவைகளில் ஒன்றாக இருந்த போதும் அவைகளைத் திருத்துவதற்கோ அல்லது புனருத்தாரணம் செய்வதற்கோ எதுவித காத்திரமான நடவடிக்கைகளும் சென்ற இரண்டு ஆண்டுகளில் மேற்கொள்ளப்படவில்லை. அழிக்கப்பட்ட அல்லது பாதிக்கப்பட்ட 91,000 வீடுகளில் ஒன்றுதானும் அரசினாலோ அல்லது வெளிநாட்டு நிறுவனங்களாலோ முழுமையாக திருப்பிக்கட்டப்படவில்லை.

குறிப்பு;- 1995 ஒக்ரோபர்— 1996 ஏப்பிரல் வரையிலான காலப்பகுதியில் இடம்பெயர்ந்த யாழ். குடாநாட்டு மக்களில் சுமார் 300,000 பேர் வன்னியிலும் வேறு பிரதேசங்களிலும் வாழுகின்றார்கள். இவர்களில் அநேகர் இப்பொழுது திரும்பி வந்து கொண்டு இருக்கிறார்கள். இவர்கள் தங்கள் காலியான வீடுகளில் தங்கி இருக்கும் உள்ளூர் இடம் பெயர்ந்த மக்களிடம் இருந்து தங்கள் வீடுகளை திருப்பிக் கேட்கின்றார்கள். இதன் காரணமாக வதிவிடப் பிரச்சினை தீவிரம் அடைகிறது. புதிதாக திரும்பி வருபவர்களுக்கு 60,000 வீடுகளும், உள்நாட்டில் இடம்பெயர்ந்து ஏற்கனவே குடாநாட்டில் உள்ள மக்களுக்கு 20,000 வீடுகளும் தேவை எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (வளரும்)


கோண்டாவில் மேற்கு

## மஹா கணபதிப்பிள்ளையார் கோயில் (காளி கோயில்)

ஷை ஆலய பரிபாலன சபையின் புனரமைப்பும், புதிய நிர்வாகசபை அங்கத்தவர்கள் தெரிவும் வெகுதானிய வருடம் 27 - 09 - 98 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2-30 மணிக்கு (புதிய நேரப்படி) ஆலய முன்றலில் நடைபெறும். ஆலயப் பற்றில் வதியும் இந்து மக்கள் அனைவரும் தவறாது சமூகம் தரும்படி அன்புடன் அழைக்கின்றோம்.

நன்றி!

ஆலயப்பற்றில் வதியும்
இந்துமக்கள்.

(59233)


# 5 வயதுக்குட்பட்ட பிள்ளைகளுக்கு சனியன்று போலியோ சொட்டுமருந்து

யாழ்ப்பாணம், செப்.16

குடாநாட்டில் உள்ள 5 வயதுக்குட்பட்ட சகல பிள்ளைகளுக்கும் எதிர்வரும் சனிக்கிழமையும் பின்னர் ஒக்ரோபர் மாதம் 24 ஆம் திகதியும் போலியோ நோய்த்தடுப்புச் சொட்டு மருந்து வழங்கப்படவுள்ளது.

இது தொடர்பாக சுகாதார சேவைகள் பதில் பிரதி மாகாணப் பணிப்பாளர் வைத்தியக் கலாநிதி க. தா. சிவபாதம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

'போலியோ' என்னும் சிறுவர்களை முடமாக்கியும் கொன்றும் வந்த கொடிய நோயை உலகத்திலிருந்து முற்றாக ஒழிக்கும் நோக்கத்தோடு உலகளாவிய ரீதியில் 'தேசிய எதிர்ச்சக்தி அளிக்கும்' தினங்கள் ஏற்படுத்தப்பட்டன.

இலங்கையில் கடந்த 1995 ஆம் ஆண்டு முதல் இவ் விசேட மருந்து கொடுக்கும் செயற்பாடு நடை பெற்று வருகிறது.

இவ்வருடம் செப்டெம்பர் 19ஆம் திகதியும், ஒக்டோபர் 24 ஆம் திகதியும் போலியோச் சொட்டு மருந்து கொடுக்கப்பட உள்ளது. சகல ஐந்து வயதுக்கு உட்பட்ட பிள்ளைகளுக்கும் இத்தினங்களில் தடை மருந்து கொடுக்க ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. முன்பு போலியோச் சொட்டு மருந்து பூரணமாகக் கொடுக்கப்பட்டவர்கள், கொடுக்கப்படாதவர்கள் என்ற பேதமின்றி சகலருக்கும் மேலதிகமாக இவ்விரு தினங்களிலும் தடைமருந்து கொடுக்கப்பட வேண்டும்.

வைத்தியசாலையில் உள்ள பிள்ளைகளுக்கும் இம்மருந்து கொடுக்க ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

மக்களின் வசதியைக்கருத்தில் கொண்டு மேலதிக நிலையங்கள் எல்லாப் பகுதிகளிலும் அமைக்கப்பட்டுள்ளன.

அன்றைய தினம் தமது பகுதியில் இருந்து வேறு இடங்களுக்குச்செல்லவேண்டி உள்ளவர்கள் அந்தந்தப்பகுதியில் இம்மருந்தைப் பெற்றுக் கொள்ள ஆவன செய்யப்பட்டுள்ளது.

தேசிய தடை மருந்து கொடுக்கும் திட்டத்துக்கு உலக சுகாதார நிறுவனம், யூனிசெப் நிறுவனம், சர்வதேச றோட்டரிக் கழகம், சர்வதேச அரிமாக் கழகம் ஆகியவை உதவி வருகின்றன.

மேலதிக விவரங்களை அவ்வப்பகுதி சுகாதார ஊழியர்களிடம் பெற்றுக் கொள்ளலாம்.

"எல்லோரும் சேர்ந்து போலியோவை உலகத்திலிருந்து ஒழிப்போம்" என்று உள்ளது.

(ஐ)


## கோப்பாய் ஐக்கிய விளையாட்டு கலாசார கழகத்தின்

வளர்ச்சி நிதிக்காக நடத்தும்

## மாபெரும் கலை நிகழ்ச்சிகள்

இடம்: யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி மைதானம்

காலம்: 19 - 09 - 1998 சனிக்கிழமை
இரவு 7. 30 மணிமுதல் மறுநாள் காலை வரை

★ சிந்துநடைக்கூத்து
★ பல்குரல் இசை நிகழ்ச்சி
★ 'அருணா' இசைகுக்குழுவினர் வழங்கும் இசைத்தேன் அமுதம்.
★ 'ராகம்ஸ்' இசைக்குழுவினர் வழங்கும் இதயராகம்

தவிர்க்க முடியாத காரணங்களினால் தென்னிலங்கை இசைக் குழுவினரின் இன்னிசை நிகழ்ச்சி நடைபெற மாட்டாது.

★ ரிக்கட்டுக்களை நுழைவாயிலில் பெற்றுக் கொள்ளலாம்.

கழக நிர்வாகத்தினர்

விளம்பர அன்பளிப்பு:

குலம் கிறீம் ஹவுஸ்

226 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

(59234)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மிதிவெடியில் சிக்கியபெண் இடது காலை இழந்தார்

யாழ்ப்பாணம் செப். 16

மல்லாகம் அகதி முகாமில் வசிக்கும் பெண் ஒருவர் நேற்றுக் காலை 9 மணிக்கு மருதனார்மடம் பூதவராயர் கோயிலடியில் விறகு வெட்டச் சென்ற சமயம் மிதிவெடியில் சிக்கி இடதுகாலை இழந்தார்.

தங்கராணி அருந்தவம் (45 வயது) என்ற பெண்ணே மிதிவெடியில் சிக்கிக் காலை இழந்தவராவார்.

யாழ். ஆஸ்பத்திரியில் அவர் அனுமதிக்கப்பட்டுள்ளார். (இ-7-15-139)

# யாழ். பல்கலைக்கழகத்தில் இன்று வேலைநிறுத்தம்

யாழ்ப்பாணம் செப். 16

கஷ்ட நிவாரணக் கொடுப்பனவு கோரி கிழக்கு, தென்கிழக்கு, ராஜரட்டை பல்கலைக்கழகங்களின் ஊழியர்கள் இன்று மேற்கொள்ளும் அடையாள வேலை நிறுத்தத்துக்கு ஆதரவு தெரிவித்து யாழ். பல்கலைக்கழக ஊழியர் சங்கம், எழுநுவினைஞர் சங்கம், தொழில்நுட்ப உத்தியோகத்தர் சங்கம் ஆகியன இணைந்து இன்று அடையாள வேலை நிறுத்தம் மேற்கொள்ளவிருக்கின்றன. (உ-3)

# தாதியர் பதவி உயர்வுக்கு யாழ்ப்பாணத்தில் பரீட்சை

## கொழும்பில் இருந்து குழு

யாழ்ப்பாணம், செப். 16

யாழ். போதனா வைத்திய சாலையில் பணிபுரியும் தாதிய உத்தியோகத்தர்களுக்கு பதவி உயர்வு வழங்கும் நேர்முகப் பரீட்சைகள் நேற்று முன்தினம் நடைபெற்றன.

இந்த நேர்முகப் பரீட்சைகளை நடத்த தாதிகள் பொறுப்பு பணிப்பாளர் நாயகம் செல்வி குசும் விதானகே, ஆய்வு கூடங்களின் பகுதி பணிப்பாளர் நாயகம் ஜே. டி. எல். ஜெயசிங்க, நிர்வாகப் பகுதிப் பணிப்பாளர் நாயகம் டபிள்யூ ஏ சுனாந்த பெரேரா ஆகியோர் யாழ்ப்பாணம் வந்திருந்தனர்.

இந்த நேர்முகப் பரீட்சைக்கு 50 தாதியர்கள் தோற்றினர்.

யாழ். ஆஸ்பத்திரியில் தாதியர் பற்றாக்குறை நிலவுவதால் இந்த நேர்முகப் பரீட்சையை யாழ்ப்பாணத்தில் நடத்த வேண்டும் என்று யாழ். ஆஸ்பத்திரிப் பணிப்பாளர் விடுத்த கோரிக்கையையடுத்து இப்பரீட்சை இங்கு நடத்தப்பட்டது குறிப்பிடத்தக்கது. (உ-3-139)

## சீயோன் தேவாலயத்தில் கருத்தரங்கு

முழுநேர கிறிஸ்தவ ஊழியர்களுக்கான கருத்தரங்கு நாளை வியாழன் முதல் 19 ஆம் திகதி சனி வரை தொடர்ந்து 3 நாள்கள் காலை 9 30 மணிமுதல் 1.30 மணிவரையும் யாழ்ப்பாணம் சீயோன்தேவாலயத்தில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் பேச்சாளராக பப்புவா நியூகினியா சீ.ஆர்.சீ சபையின் தலைமைப்போதகர் வண. எல். பி சில்வர்பக் கலந்து கொள்வார். (இ-30-8)

# கொழும்புக்கு வரும் தமிழரிடம் கொள்ளை

கொழும்பு, செப். 16

வெள்ளவத்தைப் பகுதியில் உள்ள விடுதிகளில் தங்குவதற்காக வெளியிடங்களில் இருந்து வரும் தமிழர்களிடம் பணம் உட்பட முக்கிய பொருள்கள் அபகரிக்கப்படும் சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன.

மோட்டார் சைக்கிளில் வரும் கொள்ளையர்கள் இரவு அல்லது அதிகாலையில் தனியாக விடுதிக்கு வரும் பயணிகளைவீதியில் நிறுத்தி அடையாள அட்டையைக் காண்பிக்குமாறு கேட்கின்றனராம்.

பொதிகளைச் சோதனையிட வேண்டும் என்று கூறி அதற்குள் இருக்கும் பணம் மற்றும் முக்கியமான பொருள்களை அவர்கள் அபகரித்துச் செல்கின்றனர் என்று கூறப்படுகின்றது.

சில நாள்களுக்கு முன் வவுனியாவில் இருந்து வந்த ஒரு குடும்பத்தினரை சோதனையிட வேண்டும் என்று கூறி அவர்களிடம் இருந்து 7 ஆயிரம் ரூபாவை இவர்கள் எடுத்துச் சென்றனர்.

இதே போன்று வேறு ஒருவரிடம் இருந்து 2 ஆயிரம் ரூபாவும் மற்றொருவரிடம் இருந்து 3 ஆயிரத்து 500 ரூபாவும் அபகரிக்கப்பட்டுள்ளன.

வெள்ளவத்தை இராமகிருஷ்ணா வீதியிலேயே இச் சம்பவங்கள் கூடுதலாக இடம் பெறுகின்றன. (இ-111)

# படையினரிடம் சிக்கிய திருடர்கள் ஊர்வலம்!

உரும்பராய், செப். 16

உரும்பிராயில் ஏழு திருடர்கள் நேற்று படையினரால் ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டனர்.

''நான் கள்வன்'' என்ற வாசகம் எழுதப்பட்டு பெயரும் குறிப்பிடப்பட்டு இவர்களின் கழுத்தில் அட்டை தொங்க விடப்பட்டிருந்தது.

''நான் கள்வன்'' எனக் கோஷம் எழுப்பியபடி இவர்கள் சென்றனர்.

இவர்கள் அனைவரும் உரும்ராபிப் தெற்கு, செல்வபுரத்தைச் சேர்ந்தவர்கள் என்று தெரிவிக்கப்படுகிறது.

நேற்று முன்தினம் இரவு உரும்பிராய் கிழக்கிலுள்ள வீடு ஒன்றினுள் இராணுவ சீருடையில் புகுந்த இவர்கள் வீட்டிலுள்ளவர்களை மிரட்டிப் பெறுமதிமிக்க பொருள்களைக் கொள்ளையடித்துச் சென்றனர்.

திருடிய நகை ஒன்றை நேற்று விற்பனை செய்ய முயன்றபோது இவர்களில் ஒருவர் பொதுமக்களால் பிடிக்கப்பட்டு பாதுகாப்புப் படையினரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

பிடிபட்டவர் கொடுத்த தகவலில் ஏனைய அறுவரும் கைது செய்யப்பட்டனர். இவர்களிடமிருந்து ரி.வி. டெக், ரேடியோ, கமரா, நகை, பணம் முதலானவை மீட்கப்பட்டுள்ளன என்று கூறப்படுகிறது. (இ-154)

# விளையாட்டு நிகழ்வு

கோப்பாய்க் கோட்ட பாடசாலைகளுக்கிடையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று உரும்பிராய் இந்துக்கல்லூரி மைதானத்தில் நடைபெறும் ஆட்டங்களின் விவரம் வருமாறு:

16 வயதுப் பிரிவில் புத்தூர் சோமாஸ்கந்தாக்கல்லூரிக்கு எதிராக கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியும், அச்சுவேலி மகாவித்தியாலயத்திற்கு எதிராக உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலயமும்—

18 வயதுப் பிரிவில் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரிக்கு எதிராக அத்தியார்இந்துக்கல்லூரியும் — மோதவுள்ளன. (உ-15)

★ ★ ★

பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழகம் நடத்தும் ஏழுபேர் கொண்ட உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி கடந்த 23 ஆம்திகதி ஆரம்பமாகி நடைபெறுகிறது.

இன்று கழகமைதானத்தில் நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் விவரம் வருமாறு:

★ மணி — பொமோர்ஸ் வி. க. அணி எதிர் சென். அன்ரனீஸ் 'பி' அணி.

★ 5 மணி — ஞானம்ஸ் வி. க. அணி எதிர் அல்வாய் நண்பர்கள் 'சி' அணி.

## சமய சந்நிதியில்

சண்டிலிப்பாய், செப். 16

மாதகல் பாணாவெட்டி அருள்மிகு ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் ஆலய புனராவர்த்தன பிரதிஷ்டா மகா கும்பாபிஷேகம் இன்று புதன்கிழமை காலை நடைபெறவுள்ளது. (இ-135)

★ ★ ★

கோண்டாவில் நெட்டிலிப்பாய் பிள்ளையார் கோயிலில் புதிதாக அமைக்கப்படவுள்ள சந்தான கோபாலர் ஆலயத்துக்கான அத்திவாரக்கல் நடும் நிகழ்வு இன்று புதன்கிழமை காலை 10.10 மணி முதல் 12 மணி வரையுள்ள சுபவேளையில் சமயரீதியாக நடைபெறவுள்ளது. (இ-8)

★ ★ ★

கொழும்புத்துறை யோகர் சுவாமி சமாதிக் கோயிலில் நாளை வியாழக்கிழமை ஆயிலிய நட்சத்திரமன்று பிற்பகல் 3.30 மணிக்கு பூசை, ஆராதனை, வழிபாடுகளும், நற்சிந்தனை பாராயணமும் அதனைத் தொடர்ந்து பஜனை-கூட்டுப்பிரார்த்தனைகளும் இடம் பெறும். (இ-30)

★ ★ ★

சரித்திரப்பிரசித்தி பெற்ற பொன்னாலை அருள்மிகு ஸ்ரீ வரதராஜப் பெருமான் ஆலயத்தில் இன்று புதன்கிழமை நண்பகல் 12-00 மணிக்கு ஏகாதசி விரதத்தை முன்னிட்டு விசேஷ பூசை வழிபாடுகள் நடைபெறும். (இ-30)

★ ★ ★

யாழ். கஸ்தூரியார் வீதி, அஞ்சனந்தாழ்வு புனித ஆரோக்கிய அன்னையின் வருடாந்தத் திருவிழா இன்று புதன்கிழமை ஆரம்பமாகும்.

தினமும் மாலை 5-00 மணிக்கு திருப்பலி இடம் பெறும். (இ-30)

# கல்விக் கண்காட்சி

யாழ்ப்பாணம், செப். 16

மட்டுவில் கமலாசனி வித்தியாலய கல்விப்பொருள் கண்காட்சி இன்று காலை 9 மணி தொடக்கம் பி.ப. 5மணிவரை அதிபர் எஸ். சுப்பிரமணியம் தலைமையில் மேற்படி வித்தியாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் சாவகச்சேரி கல்விக் கோட்டப் பிரதிக் கல்விப்பணிப்பாளர் இ. கணேசன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (8)

# கப்பலில் மூதாட்டி மரணம்

யாழ்ப்பாணம், செப். 16

யாழ்ப்பாணத்தில் இருந்து இடம்பெயர்ந்து வன்னிக்கு சென்ற வயோதிப் பெண் ஒருவர் மீளக் குடியமருவதற்காக கப்பலில் வந்த சமயம் கப்பலிலேயே இறந்தார்.

திருகோணமலையில் இருந்து நேற்றுப் புறப்பட்ட கப்பலில் பயணம் செய்த— உடுப்பிட்டியைச் சேர்ந்த— பூரணி கிட்டிணன் (வயது 72) என்ற மூதாட்டியே கப்பலில் மரணமானவராவார்.

கடந்த மூன்று தினங்களாக காய்ச்சலால் பீடிக்கப்பட்டிருந்த இப்பெண் கப்பலில் பயணம்செய்து கொண்டிருந்த சமயம் மரணமானார் எனத் தெரிவித்து. கப்பல் அதிகாரிகள் அப் பெண்ணின் சடலத்தை காங்கேசன்துறைப் பொலீஸாரிடம் ஒப்படைத்தனர்.

காங்கேசன்துறைப் பொலீஸார் அச்சடலத்தை மரண விசாரணையின் பொருட்டு யாழ். ஆஸ்பத்திரியில் நேற்று மாலை ஒப்படைத்தனர். (உ-3-139)

# திறப்பு விழா

யாழ்ப்பாணம், செப். 16

வேலணை தெற்கு நாவலர் சனசமூக நிலையத்தின் திறப்பு விழா இன்று காலை 10-00 மணிக்கு க. கங்கைவேணியன் தலைமையில் நடைபெறவிருக்கிறது.

தீவுப்பகுதி தெற்கு உதவி அரசாங்க அதிபர் செ. இரத்தினம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (8)

# திருட்டு அதிகரிப்பு

நவாலி கிழக்கில் ஆள்கள் இல்லாத வீடுகளில் மீண்டும் இரவு வேளைகளில் திருட்டுச் சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன.

சில நாள்களுக்கு முன்னர் இப்பகுதியிலுள்ள வீடு ஒன்றின் கதவுகள் திருடர்களால் கழற்றி எடுத்துச் செல்லப்பட்டிருந்தன.

மேலும் மற்றொரு வீட்டின் வெளிக்கேற்றுகளும் கழற்றி எடுத்துச் செல்லப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (இ-100)


JAFFNA CENTRAL COLLEGE
IN GLORIAM DEI OPTIMI MAXIMI

# யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி

## பாடசாலை அனுமதி - 1999

மேற்படி அனுமதிக்காக ஆண்டு 1, ஆண்டு 6 வகுப்புகளுக்கு விண்ணப்பங்கள் கல்லூரியால் ஏற்றுக் கொள்ளப் படுகின்றன.

விண்ணப்ப முடிவு திகதி: 30 - 09 - 1998
புதன்கிழமை நண்பகல் 12.00 மணி வரை.

தெரிவுப் பரீட்சைத் தினங்கள் வருமாறு:

ஆண்டு 1 — நேர்முகத் தேர்வு
10-10-1998 சனிக்கிழமை காலை 9.00 மணி
(பிள்ளையுடன் பெற்றோரும் சமுகமளிக்க வேண்டும்.)

ஆண்டு 6 தெரிவுப் பரீட்சை
1 - 11 - 98 ஞாயிற்றுக்கிழமை

காலை 9. 00 - 10. 00 பொது உளச்சார்பு.
10. 15 – 11. 15 தமிழ்.
11. 30 – 1. 00 கணிதம்.

குறிப்பு:-

கல்லூரியால் விநியோகிக்கப்படும் படிவத்திலேயே விண்ணப்பிக்க வேண்டும்.

(பரீட்சைக் கட்டணம் உட்பட விண்ணப்பப்படிவம் ரூபா 50/-)

— அதிபர்

(சி/4900)



உ
சிவமயம்
மண்கும்பான்

## வீரகத்தி விநாயகர் ஆலய பொதுக் கூட்ட அறிவித்தல்

மேற்படி ஆலயம் பல வருடங்களாக பூசைகள் இன்றி, வழிபாடு இன்றிக் காணப்படுவது சகலருக்கும் தெரிந்ததே. இவ் வாலயத்தை புனரமைத்து நித்திய பூசைகளை ஒழுங்கு செய்வதற்காக தற்காலிக பரிபாலன சபையை தெரிவு செய்வதற்கு எண்ணியுள்ளோம். எனவே 1998 செப்டெம்பர் 27 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10–00 (புதிய நேரம்) மணிககு ஆலய மண்டபத்தில் பொதுக் கூட்டம் நடைபெற விருப்பதால் இக்கூட்டத்திற்கு வழிபடுவோர், திருவிழ உபயகாரர்கள், ஆலய நலன் விரும்பிகள் அனைவரையும் தவறாது சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்

இரா. யோகேஸ்வரன்
கிராம அலுவலர்
மண்கும்பான்

விளம்பர அன்பளிப்பு:

மைதிலி நகை மாடம்
190A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

கிளை நிறுவனம்

மதனா ஜுவல்லறி
177/3, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
(59239)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடலில் கைதான நால்வரும் விடுவிப்பு

யாழ்ப்பாணம், செப். 16

இந்தியாவிலிருந்து இலங்கைக்கு படகு மூலம் திரும்பிக்கொண்டிருந்த போது நெடுந்தீவுக் கடலில் வைத்து படையினரால் கைது செய்யப்பட்ட நான்கு தமிழ் இளைஞர்களையும் விடுவிக்குமாறு ஊர்காவற்றுறை மேலதிக நீதிவான் மு. திருநாவுக்கரசு பணித்துள்ளார்.

கடந்த 11 ஆம் திகதி ஊர்காவற்றுறை நீதிமன்றில் நடை பெற்ற இந்த வழக்கில் சந்தேக நபர்களின் சார்பில் ஆஜரான சட்டத்தரணி பொன். பூலோகசிங்கம் சட்ட வாதத்தை நிகழ்த்தினார்.

அவர் தனது வாதத்தில்—

இந்தியாவிலிருந்து கடல் மார்க்கமாக வரும் சமயம் 1997 ஏப்ரல் 11 ஆம் திகதி கடற்படையினரால் கைது செய்யப்பட்ட இவர்கள் ஊர்காவற்றுறை பொலீஸாரிடம் ஒப்படைக்கப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டனர் –

கடந்த 14 மாதங்களாக இந்த நால்வருக்கும் எதிராக குற்றப்பத்திரம் ஏதும் தாக்கல் செய்யாமல் பொலீஸார் இழுத்தடித்து வருகின்றனர்.

– என்று சுட்டிக்காட்டினார்.

இதனையடுத்து நீதிவான் சந்தேக நபர்களான சின்னத்துரை கிருபாகரன் (20 வயது— மல்லாவி), இராசா சோமதன் (22 வயது — மன்னார்), தங்கராசா சசிக்குமார் (20 வயது — மன்னார்), சந்திரலிங்கம் ஜெகதீஸ்வரன் (19 வயது — மன்னார்) ஆகிய நால்வரையும் விடுவிக்குமாறு உத்தரவிட்டார். (உ–5)

# சாயி சமித்தியில் ஞாயிறன்று இரத்ததானம்

யாழ்ப்பாணம், செப். 16

திருநெல்வேலியில் உள்ள சத்யசாயி சமித்தியில் எதிர்வரும் ஞாயிறன்று இரத்த தான வைபவம் இடம்பெறவுள்ளது.

யாழ் போதனா வைத்திய சாலை இரத்தவங்கி அலுவலர்கள் அன்று காலை 9 மணி முதல் இரத்தம் சேகரிக்க ஏற்பாடு செய்துள்ளனர். இரத்ததானம் செய்ய விரும்புவோர் அங்கு சமுகமளிக்குமாறு சமித்தி நிர்வாகிகள் தெரிவித்துள்ளனர்.

பகவான் ஸ்ரீ சத்யசாயி பாபா அன்றைய தினத்தை உலக இரத்ததான தினமாகப் பிரகடனப்படுத்தியுள்ளதை அடுத்தே இந்த இரத்ததான நிகழ்வுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (ஐ)

## பொலீஸ்...

(முதலாம் பக்கத்தொடர்)

நீதிபதி கைது செய்யப்பட்ட விவகாரமே இந்த இடமாற்றத்துக்குக் காரணம் எனத் தெரிவிக்கப் பட்டது.

நீதிபதி மகாநாம கைது செய்யப்பட்டமைக்கான முழுப்பொறுப்பையும் ஏற்று சட்டமா அதிபர் பதவிவிலக வேண்டும் என்று சட்டத்தரணிகள் சங்கத்தைச் சேர்ந்த ஹேமந்த வர்ணகுல சூரிய தெரிவித்துள்ளார்.

(மற்றுமொருச் செய்தி 5-ஆம் பக்கத்தில்) (உ–3)

## 16 இராணுவத்தின...

(முதலாம் பக்கத்தொடர்)

பட்ட சம்பவம் தொடர்பாக சந்தேகத்தின் பேரில் பொலீஸாரினால் கைது செய்யப்பட்டு கடந்த பல மாதங்களாக படையினரின் பாதுகாப்பில் வைக்கப்பட்டிருந்த 16 இராணுவத்தினரும் நேற்று யாழ். நீதிமன்றில் மீண்டும் ஆஜர் செய்யப்பட்டனர்.

சந்தேக நபர்களை தொடர்ந்து இராணுவப் பொலீஸ் தலைமை அலுவலகக் கட்டுப்பாட்டில் வைத்திருக்குமாறு நீதிவான் கட்டளையிட்டார்.

சந்தேக நபர்களை நீதிமன்ற தவணைகளின் போது ஒழுங்காக ஆஜர் செய்ய வேண்டும் என்றும் உத்தரவிடப்பட்டது. வழக்கு இம்மாதம் 18 ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டது. (உ–5)


## ஸ்ரீவிநாயகர்

வீடியோ & ஒடியோ ரெக்கோடிங் சென்ரர்

எமது இன்றைய VIDEO CD வெளியீடுகள்!

தாயின் மணிக்கொடி
உயிரே
தெய்வம்
காதல் பரிசு
SECONS
DRIVE
ஒளியும் – ஒலியும்

புதிய பழைய பாடல்கள் சிறந்த முறையில் ஒலிப்பதிவு செய்து தரப்படும்.

பலாலி வீதி மேல்மாடி,
திருநெல்வேலி சந்தி,
திருநெல்வேலி.

(59240)



எமது ஒறிஜினல் வெளியீடுகள்!

★ பைலட் பிறேம்நாத்
★ பட்டாக்கத்தி பைரவன்
★ உன்னை நினைச்சேன் பாட்டுப் படிச்சேன்
★ சவர்மென்ட் மாப்பிள்ளை
★ சட்டம் ஒரு விளையாட்டு
★ புதிய போஸ்டர்களும் விற்பனைக்குண்டு.

## வீடியோ விமல்

யாழ்ப்பாணம்.

(சி/4898)



Diploma in Computer Hardware

மேற்படி பாடநெறிக்கு விண்ணப்பித்த அனைத்து மாணவர்களும் 18-09-98 வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு அலுவலகத்திற்குத் தவறாது சமுகம் தரவும்.

புதிதாகச் சேர்ந்து கொள்ள விரும்பும் மாணவர்களும் இணைந்து கொள்ளலாம்.

Director,
IIS.
68, Clock Tower Road,
Jaffna.

(சி/4897)


# வீதிகள் திருத்தத் தார் உண்டு ஆனால் றோலர்கள் போதா

யாழ்ப்பாணம், செப். 16

வீதிகளைத் திருத்த போதியளவு தார்இருந்தும் றோலர்களுக்குப் பற்றாக்குறை காணப்படுவதால் வீதி திருத்தும் பணிகளைத் துரிதப் படுத்த முடியாமல் இருப்பதாக வீதி அபிவிருத்தித் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

குடா நாட்டின் பல வீதிகளிலும் கல் பறிக்கப்பட்டிருக்கின்ற போதும் றோலர்கள் போதியளவு இன்மையால் வீதிகளைத் திருத்த முடியாதிருப்பதாகவும் —

தற்போது பாவனையிலுள்ள இரு றோலர்களும் சிறு வீதிகளைத் திருத்தவே பயன்படுத்தக் கூடியவை என்றும் —

பிரதான வீதிகளை திருத்தம் செய்வதற்கு பயன்படுத்த முடியாதவை எனவும் — மேலும் தெரிவிக்கப்பட்டது.

மழை காலம் நெருங்குவதால் திருத்தப்படாத வீதிகள் மேலும் சேதம் அடைந்து போக்குவரத்து பெரும் அளவில் பாதிக்கப்படலாம் என்று அஞ்சப்படுகிறது. (இ–7)

# பனையில் கள் எடுக்க பயிற்சி

தென்மராட்சி, செப். 15

பனை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தினர் சங்க அங்கத்தினருக்கு பனை மரத்தில் காய்வெட்டிகள் எடுப்பதற்கான ஒரு மாத கால பயிற்சி வகுப்பை விரைவில் ஆரம்பிக்கவுள்ளனர்.

பயிற்சி அளிப்பது மூலம் ஜூலை மாதம் தொடக்கம் ஜனவரி மாதம் வரை ஏற்படக் கூடிய கள் உற்பத்தி வீழ்ச்சியைக் குறைக்க முடியுமென சங்க பொது முகாமையாளர் கா. குணநாயகம் தெரிவித்தார்.

பனம் பாளையிலிருந்து வழமையாகப் பெறப்படும் உற்பத்தியை விட காய்வெட்டும் பாளையில் இருந்து கூடுதல் கள்ளை உற்பத்தி செய்யலாம் எனவும் அவர் தெரிவித்தார். (இ–117)

## இளைஞனின்...

(முதலாம் பக்கத்தொடர்)

இம்மரணம் தொடர்பாக யாழ். இராணுவ முகாமைச் சேர்ந்த கப்டன் றொனி பெத்த லோமியஸ், லெப்டினன்ட் டிக்ஷன் ராஜமந்திர் ஆகிய இரு அதிகாரிகள் பொலீஸாரால் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டனர். அவர்களை விளக்கமறியலில் வைக்கும்படி நீதிவான் உத்தரவிட்டார்.

தடுப்புக் காவலில் இருந்த சமயம் தனது மகன் உயிரிழந்தது குறித்து சம்பந்தப்பட்ட இளைஞரின் தந்தை மனித உரிமைக் குழுவின் யாழ். அலுவலகத்துக்கு முறைப்பாடு செய்துள்ளார். ஆணைக்குழுவின் யாழ். அலுவலகப் பிரதிநிதிகள் நேற்று நீதிமன்ற விசாரணைகளின் போது அங்கு சமுகமளித்திருந்தனர். (மற்றொருசெய்தி 6 ஆம் பக்கத்தில்) (உ–5)

## மாநகர சபை...

(முதலாம் பக்கத் தொடர்)

யாழ். மாநகர மேயராக இருந்து படுகொலை செய்யப்பட்ட திருமதி சரோஜினி யோகேஸ்வரனின் இடத்துக்குப் புதிய மேயராக பொ. சிவபாலனை நியமிக்க கால தாமதம் காட்டியது போல, இப்போதும் புதிய மேயரை நியமிப்பதில் கால தாமதம் காட்டவேண்டாம் என்று தமிழர் விடுதலைக் கூட்டணி உறுப்பினர்களிடம் ஏனைய கட்சி உறுப்பினர்கள் கோரியதாக அறியவந்தது. (உ-5-7–1 73)

# குண்டு எனக் கருதிய பொதியில் தங்க நகைகள்!

அம்பாறை, செப். 16

கல்முனை சாய்ந்தமருது பிரதான வீதியில் நேற்றுக் காலை காணப்பட்ட அநாமதேயப் பார்சல் ஒன்றால் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

குண்டுப் பார்சல் எனக் கருதி அங்கு கூடிய மக்கள் அந்தப் பார்சலைக் கல்லால் எறிந்தும், நீண்ட தடிகளால் தட்டியும் பார்த்தனர்.

அது வெடிக்காததால், அந்தப் பார்சலைத் திறந்தபோது மக்களுக்கு ஆச்சரியம் காத்திருந்தது!

அந்தப் பார்சலில் தங்கமோதிரம், தங்கத்தோடுகள் காணப்பட்டனவாம்.

அவற்றின் பெறுமதி ஒரு லட்சம் ரூபாவுக்கு மேல் என மதிப்பிடப்பட்டது.

இந்த நகைப் பார்சல் பின்னர் கல்முனைப் பொலீஸாரிடம் ஒப்படைக்கப்பட்டது. (உ-3-14-21)

## மெண்டிஸின் இறுதிக்கிரியை:

# அரசியல் பிரமுகர்கள் எவரையும் காணோம்!

யாழ். மாநகரசபைக் குண்டு வெடிப்பில் கொல்லப்பட்ட யாழ். நகர இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் சுஸந்த மெண்டிஸின் இறுதிக் கிரியைகள் நேற்று முன் தினம் கண்டியில் நடைபெற்றன. ஆனால் அரசியல் பிரமுகர்கள் எவரும் மரண வீட்டுப் பக்கம் தலை காட்டவில்லை என்று கொழும்புப் பத்திரிகைச் செய்திகள் தெரிவித்தன.

கண்டியில் இறுதிக் கிரியைகள் உணர்வுபூர்வமாக நடைபெற்றன. பதினையாயிரம் மக்கள் வரை இறுதி ஊர்வலத்தில் கலந்து கொண்டார்கள் ஆனால் அரச எதிர்க்கட்சிப் பிரமுகர்களோ கண்டி தலதா மாளிகை மத பீடத்தினரோ இறுதிக் கிரியைகளில் பங்கு பற்றவில்லை.

எனினும் இராணுவத்தளபதி லெப்டினன்ட் ஜெனரல் றோஹான் தளுவத்த மற்றும் இராணுவ உயரதிகாரிகள் இறுதிக் கிரியைகளில் பங்கு பற்றினர்.

(மற்றொரு செய்தி 7 ஆம் பக்கத்தில்) (உ)

# பொலீஸ் அதிகாரிகள் வடக்குக்கு நியமனம்

கடந்த வெள்ளிக்கிழமை நல்லூரில் இடம்பெற்ற குண்டு வெடிப்பில் உயர் பொலீஸ் அதிகாரிகள் பலர் உயிரிழந்ததைத் தொடர்ந்து புதியவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

புதிய பொலீஸ் அத்தியட்சகராக மூத்த புலனாய்வுச் சேவை அதிகாரியான ஜி. என். பட்டிகிரிகொறன கடந்த 14 ஆம் திகதி முதல் நியமிக்கப்பட்டுள்ளார்.

யாழ். தலைமையக பொலீஸ் பொறுப்பதிகாரியாக இன்ஸ்பெக்டர் மார்க் நியமிக்கப்பட்டுள்ளார்.

ஊர்காவற்றுறை பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரியாக டி. எம். வுடவேட் நியமிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை—யாழ். பிரதேசத்துக்கு பொறுப்பாக இருந்த பிரதிப் பொலீஸ் மா அதிபர் இந்திரா டி. சில்வா கொழும்புக்கு அழைக்கப்பட்டு பொலீஸ் தலைமையக நிர்வாகப்பணிகளுக்கு பொறுப்பான பிரதிப் பொலீஸ் மா அதிபராக நியமிக்கப்பட்டுள்ளார். (உ–3-10)

# வீதி திருத்தும் பணி பூர்த்தி

வீதி அபிவிருத்தித்திணைக்களத்தினால் மேற்கொள்ளப் பட்டுவந்த இருபாலையிலிருந்து நவக்கிரி வரையிலான இராசபாதையைத் திருத்தும் பணிகள் தற்போது முடிவடைந்துள்ளன. (இ-7)


யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை

## இராமநாதன் நுண்கலைத்துறை

இசைக்கலைமாணி/ நாட்டியக் கலைமாணி/ இசைமாணி/ நாட்டியமாணி

இரண்டாம் ஆண்டு பரீட்சை 1996-97

மேற்படி பரீட்சைகள் 25-9-98 (வியாழக்கிழமை) காலை 9-30 மணிக்கு யாழ். பல்கலைக்கழக இராமநாதன் மண்டபத்தில் ஆரம்பமாகும்.

- பதிவாளர்

10-09-1998.

(சி/4886)


## கருணாநிதி...

(முதலாம் பக்கத் தொடர்)

வில் கலந்து கொள்வதற்காக நேற்றுச் சென்னை வந்திருந்த இந்தியப் பிரதமர் வாஜ்பாயை வரவேற்பதற்காக விமான நிலையம் வந்திருந்தபோதே மு. கருணாநிதியும், வை. கோபாலசாமியும் நேரில் சந்தித்துக் கை குலுக்கிக் கொண்டனர்.

அ. தி. மு. க. தலைவி செல்வி ஜெயலலிதா பிரதமர் வாஜ்பாயை வரவேற்க விமான நிலையம் வரவில்லை. ஏனைய கட்சிப் பிரமுகர்கள் வந்திருந்தனர். மற்றும் சென்னை மாநகர மேயர் ஸ்டாலின், பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் டாக்டர் ராமதாஸ் ஆகியோரும் விமான நிலையம் வந்திருந்தனர். (உ-6)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 16-09-1998 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org